RNINUMBER:TNTAM/2018/75087

# மெட்ராஸ் மணி

MADRAS MANI | DAILY TAMIL | தைரியம் மற்றும் நெறிமுறை பத்திரிகை | PUBLISHED FROM - CHENNAI

13.01.2026 (செவ்வாய்க்கிழமை) பக்கங்கள் 8 விலை 5.00 மணி 7 | ஓசை 296

Facebook/dailymadras@gmail.com | dailymardras@gmail.com

5 பிரதமர் மோடி ஜன.23–ல் அந்தமான் பயணம் நேதாஜி பிறந்த நாள் விழாவில் பங்கேற்கிறார்



6 டிரம்ப் தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு பதிலடி ஈரான் கடும் எச்சரிக்கை



8 நியூஸி.க்கு எதிராக 301 ரன்கள் இலக்கை போராடி வென்ற இந்தியா - முதல் ஒருநாள் ஹைலைட்ஸ்



# இலங்கையில் கூட்டாட்சி முறையை உருவாக்க வேண்டும்

## இந்தியா அழுத்தம் தர பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**சென்னை, ஜன. 13–**

இலங்கையில் கூட்டாட்சி முறையை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: ஆழமான வரலாற்று, கலாச்சார மற்றும் உணர்வுப் பூர்வமான பிணைப்புகளின் காரணமாக, இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளையும், எண்ணங்களையும் நிலைநிறுத்துவதில் தமிழகம் முன்னணியில் உள்ளது.

இலங்கையில் முன்மொழியப்பட்ட புதிய அரசியலமைப்பு தொடர்பான பிரச்சினை குறித்து தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டு வருவது எனது கடமை. இலங்கைத் தமிழர்கள் 77ஆண்டுகளுக்கும் மேலாக திட்டமிட்ட பாகுபாடு, வன்முறை மற்றும் அவர்களின் உண்மையான உரிமைகளை கட்டுப்படுத்தும் முயற்சிகளை சகித்து வந்துள்ளனர். பலர், இதனை இனப்படுகொலை என்று விவரிக்கும் ஒரு நிலைக்கு வழிவகுத்துள்ளது.

சுதந்திரத்துக்கு பிந்தைய இலங்கையின் அரசியலமைப்புகள் (1947, 1972 மற்றும் 1978-ம் ஆண்டுகளின் அரசியலமைப்புகள்) அனைத்தும் ஒரு ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் வேரூன்றியிருந்தன. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு வழிவகுத்தது. உள்நாட்டுப் போர் முடிவடைந்து 16 ஆண்டுகளாக இந்த ஒற்றையாட்சி கட்டமைப்பு, பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மக்கள்தொகை மாற்றங்கள், நில அபகரிப்புகள், தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவற்றிற்கு தொடர்ந்து வழி வகுத்து வருகிறது.

இந்த முன்மொழியப்பட்டகட்டமைப்புமீண்டும் ஒரு ஒற்றையாட்சி மாதிரியை வலுப்படுத்துவதாக தெரிகிறது. இது அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் நியாயமான எண்ணங்களை புறக்கணித்து, அச்சுறுத்தும் வகையில் உள்ளது. இந்தச்சூழலில், இந்திய அரசால் பூட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட 1985 அமைதி பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளில் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளையே தற்போது பெறப்பட்டுள்ள கோரிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கை தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல் (தமிழர் தேசியம்), வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக்கொள்வது (தமிழர் தாயகம்) தமிழ் தேசத்துக்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல் (தமிழர் தன்னாட்சி உரிமை) மற்றும் மலையகத் தமிழர்களுக்கான முழு குடியுரிமை உரிமைகள் உட்பட, அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும். பாகுபாடின்மையையும் உறுதி செய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல் போன்றவற்றையே இந்த கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன.

இந்தக் கூறுகளை உள்ளடக்காத புதிய அரசியலமைப்பானது அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடரவழிவகுக்கும். 1987-ல் இந்திய இலங்கை ஒப்பந்தம் உட்பட வரலாற்று ரீதியாக இலங்கையில் அமைதி மற்றும் நீதிக்காக அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டிய தார்மீகக் கடமையை இந்தியா கொண்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் அவல நிலை தமிழகத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. லட்சணக்கான மக்கள், அங்குள்ளவர்களை தங்கள் உறவினர்களாகக் கருதுகின்றனர். இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்களின் குறைகளை உண்மையாக நிவர்த்தி செய்யும் ஒரு அரசியலமைப்பு செயல்முறையினை கொண்டு வருவதற்கு, இந்திய அரசாங்கம் தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் செய்யும், இன சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கும், பன்முகத்தன்மை, சமத்துவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் கூட்டாட்சி முறையை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். இத்தகைய அணுகுமுறை நமது அரசியலமைப்பு விழுமியங்களுடனும் ஒருமித்திருக்கும். அந்த வகையில் இலங்கை தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க இந்தியா நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார்.



நீலகிரிமாவட்டத்தில்கடந்தசிலநாட்களாககடும்குளிர்நிலவிவருகிறது. இதனால்ஊட்டிபடகுஇல்லத்தில் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்த அளவே காணப்பட்டது.

### அரசுக்கு எதிரான போராட்டத்தில் 500– க்கும் மேற்பட்டோர் பலி:

# ஈரான் மீது ராணுவ நடவடிக்கைக்கு தயங்க மாட்டோம்

## அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஜன.13–**

ஈரானில் அரசுக்கு எதிராக போராட்டம் உச்சம் அடைந்துள்ளது. இது வரை 500–க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளார்கள். ஆகவே ஈரான் மீது ராணுவ நடவடிக்கைக்கும் தயங்கமாட்டோம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாரசீகம் என அழைக்கப்பட்டு வந்த ஈரானில் 1979–ஆம் ஆண்டு வரை மன்னராட்சி நடைபெற்று வந்தது. இந்த ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளுக்கு ஆதரவாக ஆட்சியாளர்கள் இருந்து வந்தார்கள்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு புரட்சி ஏற்பட்டது. மன்னர் நாட்டை விட்டு ஓடினார். இதையடுத்து அங்கு இஸ்லாமிய குடியரசு உருவானது. நாட்டின் உயர் தலைவராக அயோத்துல்லா கொமேனி பதவியேற்றார்.

அவரது ஆட்சியில் இஸ்லாமிய சட்டங்கள் கடுமையாக்கப்பட்டன. பெண்களுக்கு கட்டுப்பாடுகளும்விதிக்கப்பட்டன. இதற்கு எதிராக அவ்வப்போது போராட்டங்கள் வெடித்தன.

சில வருடங்களுக்கு முன்னர் இளம் பெண் ஒருவர் சரியாக ஹிஜாப் அணியவில்லை என்று கைது செய்யப்பட்டார். ஆனால் அவர் போலீஸ் காவலில் மர்மமாக இறந்தார்.

அந்த சமயத்திலும் பயங்கர போராட்டம் வெடித்தது. ஆனால் எல்லா போராட்டங்களும் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டன.

போர்க்காலங்களில் மட்டும் போராட்டம் அடங்கியிருந்தது. குறிப்பாக 1980 முதல் 1988 வரை ஈராக்குடன் போர் நடந்தது. மேலும் சமீபத்தில் இஸ்ரேலுடனும் போர் நடந்தது. அப்படிப்பட்ட கட்டத்தில் அடங்கியிருந்தது.

இப்படிப்பட்ட நிலையில் நாட்டின் பண வீக்கம் உயர்ந்துள்ளது. விலைவாசிகளும் அதிகரித்துள்ளன. இதற்கு எதிராக கடந்த டிசம்பர் 28–ஆம் தேதி போராட்டம் வெடித்தது. அந்தப் போராட்டம் நாளுக்கு நாள் வலுவடைந்தது.



இதற்கு அனைத்து தரப்பு மக்களும் ஆதரவு அளித்துள்ளார்கள். ஆண்களும், பெண்களும் வீதியில் திரண்டு அரசுக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றார்கள். மறியல், தீவைப்பு சம்பவங்கள் நடந்து வருகின்றன. போராட்டக்காரர்கள் மீது ஈரானிய அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது. தினமும் உயிரிழப்புகள் அதிகரிக்கத் தொடங்கின.

எனவே அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்தார். மக்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தால் நாங்கள் இறங்குவோம் என கூறினார். வெளிநாட்டில் வாழும் மன்னர் குடும்பத்தினரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

மக்கள் ஒவ்வொரு நகரையும் கைப்பற்ற வேண்டும் என அறிவுரை வழங்கினர். இதனால் ஈரான் அரசு கோபம் கொண்டது. இந்த போராட்டத்திற்கு அமெரிக்காவும், இஸ்ரேலும் தான் காரணம் எனக் கூறியது.

ஆகவே அவர்களின் ராணுவ நிலைகளை தாக்குவோம் என தெரிவித்தது. அது மட்டுமல்லாது போராட்டம் நடத்துபவர்கள்கடவுளின்விரோதிகள் என்று அறிவித்து அவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படும் என அரசு அறிவித்தது.

இதன் விளைவாக நேற்று வரை 500–க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆகவே ஈரான் சிவப்புக் கோட்டை தாண்டி விட்டதாகவும், அதன் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கவும் தயங்க மாட்டோம் என்று அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதனால் ஈரான் மீது எந்த நேரமும் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

### 16 செயற்கைக்கோள்களுடன்

# பி.எஸ்.எல்.வி.சி–62 ராக்கெட் பறந்தது

## பாதை மாறியதால் இலக்கை எட்டவில்லை

**ஸ்ரீஹரிகோட்டா, ஜன.13–**

16 செயற்கைக்கோள்களுடன் பி.எஸ்.எல்.வி.சி–62 ராக்கெட் இன்று ஏவப்பட்டது. ஆனால் அது பாதை மாறியதால் இலக்கை எட்டவில்லை. இந்திய விண்வெளி விஞ்ஞானிகள்பிறநாடுகளுக்கு போட்டியாக செயற்கைக்கோள்களை செலுத்தி வருகிறார்கள்.

அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை சுமந்து செல்லக்கூடிய ராக்கெட்டுகள் இந்தியாவிடம் இல்லை. அதனால் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய விண்வெளி முகமையான ஏரியன் ஆகியவற்றின் ராக்கெட்டுகள் மூலமே இந்தியா ஏவி வந்தது. பின்னர் அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை சுமந்து செல்லக்கூடிய ஜி.எஸ்.எல்.வி. வகை ராக்கெட்டுகளையும் இந்தியா தயாரிக்கத் தொடங்கியது.

கடைசியாக டிசம்பர் மாதம் இறுதியில் மிக மிக அதிக எடை கொண்ட அமெரிக்க செயற்கைக்கோளை சுமந்து கொண்டு இந்திய ராக்கெட் பறந்தது.

2026 புத்தாண்டிலும் அதிக அளவில் செயற்கைக்கோள்களை ஏவ இந்திய விண்வெளி மையம் திட்டமிட்டுள்ளது. அதன் படி முதல்முதலாக இன்று பி.எஸ்.எல்.வி. சி–62 ராக்கெட் மூலம் 16 செயற்கைக்கோள்களை ஏவி உள்ளது. இந்திய பாதுகாப்புத் துறை பயன்பாட்டிற்காக அன்விஷா எனும் செயற்கைக்கோள் தயாரிக்கப்பட்டது. இந்த செயற்கைக்கோளுடன் 15 சிறிய செயற்கைக்கோள்களும் சேர்த்து அனுப்பப்பட்டுள்ளன. இவற்றில் சில வெளிநாடுகளின் செயற்கைக்கோள்கள் ஆகும். இந்த 16 செயற்கைக்கோள்களுடன் பி.எ'ஸ்.எல்.வி.சி.–62 ராக்கெட், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இன்று காலை 10.17 மணிக்கு தீப்பிழம்பை கக்கிக்கொண்டு விண்ணை நோக்கி புறப்பட்டது. ஆனால் அந்த ராக்கெட் பாதை மாறியதால் இலக்கை எட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வரலாறு காணாத புதிய உச்சத்தை தொட்டது


# தங்கம் விலை கிராமுக்கு ரூ.220 உயர்ந்தது

## பவுன் விலை ரூ.1 லட்சத்து 5 ஆயிரத்தை தொட்டது

**சென்னை, ஜன. 13–**

2025ம் ஆண்டில், தங்கத்தின் விலை ஏற்றம் அசாத்தியமானதாக இருந்தது. கடந்த ஆண்டு சுமார் 52 முறை புதிய உச்சங்களை எட்டியது. யாரும் எதிர்பாராத வகையில் சவரனுக்கு ரூ.1 லட்சத்தை கடந்தது. இது நகை மற்றும் முதலீட்டு பொருட்களில் ஆர்வமுள்ளவர்களின் கவனத்தை ஈர்த்தது. நகை வாங்கும் நடுத்தர இல்லத்தரசிகளை அதிர்ச்சி அடைய செய்தது.

அதன் பின்னர், தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது. நேற்று முன் தினம்



சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.100 அதிகரித்து ஒரு சவரன் ரூ.1,03,200க்கு விற்பனைசெய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.100 அதிகரித்து ஒரு கிராம் ரூ.12,900க்கு விற்பனைசெய்யப்பட்டது. நேற்று விடுமுறை தினம் என்பதால், தங்கம் விலையில் மாற்றமில்லை.

இந்நிலையில் இன்று தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து, வரலாறு காணாத புதிய உச்சத்தை பதிவு செய்துள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,760 அதிகரித்து ஒரு சவரன் ரூ.1,04,960க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிராமுக்கு ரூ.220 அதிகரித்து ஒரு கிராம் ரூ.13,120க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தங்கத்தைபோலவே வெள்ளி விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில், ஒரு கிலோ வெள்ளி இன்று ரூ.12,000 அதிகரித்து ரூ.2,87,000க்கும், கிராமுக்கு ரூ.12 அதிகரித்து ஒரு கிராம் ரூ.287க்கும் விற்பனைசெய்யப்பட்டு வருகிறது.

WANTED

THE SOUTH INDIA TIMES

Applications are invited from young, energetic, and talented correspondents, who have flair for writing reports in crisp style and are willing to accept the challenge and work sincerely to grow as a professional with the first-ever regional newspaper like The South India Times, a complete regional paper that showcases all happenings in five southern states besides elsewhere in the country as well as the world, as they unveil

**Dist Correspondent & Constituency-wise Stringers, Sub-Editors & Advertisement Executives.**

Required Experience: Minimum 2-3 years experience in real-time media.Salary: Negotiable for the right candidates Send your resume / CV.

99122 20350

info.southindiatimes@gmail.com

### தேர்தல் நெருங்கி கொண்டிருக்கும் நிலையில்

# கூட்டணி தொடர்பாக யாரும் என்னிடம் பேசவில்லை

## பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் பேட்டி

**சென்னை, ஜன.13–**

திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் உள்ள அரசியல் பயிலரங்கில் பாமக சமூக ஊடகப் பேரவை மாநில நிர்வாகிகள் கூட்டம் பாமக செயல் தலைவர் காந்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் பங்கேற்று பேசும்போது, ''தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் தருவாயில் பொறுப்பாளர்கள் தொய்வாக செயல்படாமல் வேகமாக செயல்பட வேண்டும். சமூக ஊடகங்களில் கருத்துகளை பதிவிடும்போது கவனமாக கையாள்வதோடு, தனிமனித விமர்சனங்களை தவிர்க்க வேண்டும்'' என்றார்.

இதைத்தொடர்ந்து கூட்ட அரங்கை விட்டு வெளியே வந்த ராமதாஸிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், "தேர்தல் கூட்டணி தொடர்பாக பேசிக்கொண்டிருக்கிறோம். தற்போது வரை பாஜக, திமுக, அதிமுக உள்ளிட்ட எந்த அரசியல் கட்சியும் என்னிடம் தேர்தல் கூட்டணி குறித்து எதுவும் பேசவில்லை.

எந்த அரசியல் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்பது என்பது குறித்து, கட்சியின் நிர்வாகிகளிடம் பேசிக்கொண்டிருக்கிறோம். 2026 சட்டப்பேரவைத் தேர்தல் அமைதியாக நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பது தான் எனது விருப்பம்" என்றார்.

தேர்தல் ஆணையத்துக்கு கடிதம்: இதனிடையே, தேர்தல் ஆணையத்துக்கு ராமதாஸ் எழுதியுள்ள கடிதத்தில், ''பாமக பெயரை சட்டவிரோதமாக பயன்படுத்தும் அன்புமணி மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாமக தலைவர் என அன்புமணி உரிமை கோர முடியாது. தேர்தல் கூட்டணி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த எனக்கு மட்டுமே உரிமை உள்ளது. அதிமுகவுடன் கூட்டணி குறித்து அன்புமணி பேச்சு நடத்தியது சட்டவிரோதமானது. தேர்தல் ஆணையத்திற்கு எதிராக மோசடி செயல்களில் ஈடுபட்டு தலைவர் பதவி காலத்தை அன்புமணி நீட்டித்துக் கொண்டார். இதற்கு எதிரான வழக்கு டெல்லி உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. அனுமதியின்றி பாமக பெயரை அன்புமணி பயன்படுத்துவது குறித்து தேர்தல் ஆணையம் விளம்பரம் செய்ய வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

### விவசாயிகளை தாக்கியது

# திருக்குறுங்குடியில் கூண்டில் சிக்கிய கரடி

## வனத்துறையினர் காட்டில் விட்டனர்

**களக்காடு, ஜன.13**

களக்காடு அருகே உள்ள திருக்குறுங்குடி சுற்று வட்டார பகுதியில் விவசாயிகளை தாக்கிய கரடியை வனத்துறையினர் இரும்பு கூண்டில் பிடித்தனர்.

திருக்குறுங்குடி அருகே உள்ள வட்டக்குளம்,நம்பி கோயில் சாலையில் சில மாதங்களாக வனப்பகுதியிலிருந்து கீழே வந்துள்ள கரடி அதிகாலை, இரவு நேரங்களில் வயல் வெளிகள் மற்றும் தனியார் தோட்டங்களில் உலா வந்தது.

இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம் கரடி தாக்கியதில் திருக்குறுங்குடி வட்டக்குளத்தை சேர்ந்த விவசாயி முருகன் (57), படுகாயமடைந்தார். இதையடுத்து 4 நாட்களுக்கு முன் வயலுக்கு சென்ற வட்டக்குளத்தை சேர்ந்த ராஜ் மனைவி தங்கபுஷ்பத்தையும் (65) கரடி தாக்கியது,காயமடைந்த அவர் சிகிச்சையில் உள்ளார். இதனால் பொது மக்கள் மிகுந்த அச்சமடைந்தனர். இந்நிலையில் கரடியை இரும்பு கூண்டு வைத்து பிடிக்க வேண்டுமென விவசாயிகள் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் வனத்துறைக்குகோரிக்கை விடுத்தனர் .இதையடுத்து களக்காடு புலிகள் காப்பக துணை இயக்குனர் (பொ) ஸ்ரீகாந்த் அறிவுரைப்படி, வனச்சரகர் (திருக்குறுங்குடி) யோகேஷ்வரன் தலைமையில் நம்பி கோயில் சாலை வட்டக்குளத்தில் தனியார் தோட்டத்தில் கரடி நடமாட்டமுள்ள பகுதியில் வனத்துறையினர் இரும்பு கூண்டு வைத்தனர்.அதில் கரடிக்கு பிடித்த உணவுகளை வைத்து வனத்துறை ஊழியர்கள் சுழற்சி முறையில் கண்காணித்தனர்.

இதையடுத்து நேற்று இரவு வனத்துறையின் கூண்டுக்குள் கரடி சிக்கி கொண்டது.கூண்டுக்குள் சிக்கிய கரடியை வனத்துறை கால்நடை மருத்துவ குழுவினர் பிரிசோதனை செய்தனர். அதன் பின் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டு களக்காடு வனக்கோட்ட வனச்சரக பகுதியில் கரடி பாதுகாப்பாக விடப்பட்டது. தொடர்ந்து கரடியை கண்காணிக்கும் பணி நடக்கிறது. கரடியை கூண்டில் பிடித்த வனத்துறைக்கு பொது மக்கள் பாராட்டு தெரிவித்தனர். மேலும் புதர்களில் கரடி பதுங்கியுள்ள பகுதிகளில் கூண்டு வைக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தினர். கூண்டில் சிக்கிய கரடியைவனத்துறையினர் இன்று காலை காட்டில் விட்டனர்.

### தமிழக எல்லை அருகே

# 200 அடி பள்ளத்தில் கவிழ்ந்த லாரி

## பெரும் விபத்து தவிர்ப்பு

**கூடலூர், ஜன. 13**

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு சரக்கு ஏற்றிச்சென்ற லாரி ஒன்று, தமிழக கேரளா எல்லை அருகே சுமார் 200 அடி ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இடையில் இருந்த மரத்தில் லாரி மோதி நின்றதால், பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

நாமக்கல்லில் இருந்து டைல்ஸ் ஒட்டும் பசை ஏற்றிக்கொண்டு லாரி ஒன்று கம்பம்மெட்டு வழியாக கேரளமாநிலம் கட்டப்பனைக்கு சென்றது. லாரியை கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த மணிமாறன் (52) ஓட்டிச்சென்றார். இந்த லாரியானது நேற்று புளியன்மலை கட்டப்பனை சாலையில் உள்ள ஹில்டாப் அருகே இருக்கும் ஒரு கொண்டை ஊசி வளைவில் சென்றபோது, லாரி, கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் பாய்ந்தது.

பள்ளத்தில் கீழே ஒரு வீடு இருந்தது. லாரி நேராக அந்த வீட்டின் மீது விழாமல், இடையில் இருந்த ஒரு மரத்தில் மோதி நின்றது.

இதனால் அந்த வீடும், அங்கிருந்தவர்களும் தப்பினர். லாரி விழுவதைக் கண்டு வீட்டின் முன் இருந்த நபர் பயந்து ஓடிய போது, கீழே விழுந்து அவருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினரும் தீயணைப்புப் படையினரும், காயமடைந்த லாரி டிரைவர் மணிமாறனை கட்டப்பனை கூட்டுறவு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர்.

மேலும் லாரி கீழே சரிந்து விடாமல் இருக்க தடிமனான கயிறுகளால் கட்டி நிறுத்தினர்.

பின்னர் கிரேன் உதவியுடன் லாரி மீட்கப்பட்டு சாலைக்கு கொண்டு வரப்பட்டது.

### அ.தி.மு.க. சார்பில்

# எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, ஜன. 13**

அ.தி.மு.க. சார்பில் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன. இதற்கான அறிவிப்பை அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளார்.

அ.தி.மு.க. நிறுவனர் எம்.ஜி.ஆரின் 109–ஆவது பிறந்த நாள் விழா வருகிற 17–ஆம் தேதி (சனிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி வருகிற 18–ஆம் தேதி (ஞாயிற்றுக் கிழமை) மற்றும் 19–ஆம் தேதி (திங்கள்கிழமை) ஆகிய 2 நாள்கள் அ.தி.மு.க. சார்பில் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள் நடக்கின்றன.தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் 82 மாவட்டங்களிலும், புதுச்சேரி, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் இந்த பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன. இந்த தகவலை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் தாங்கள் சார்ந்த மாவட்டத்தில் நடைபெற உள்ள பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இவர்கள் கழகத்தின் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தநிர்வாகிகளுடனும் உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகளுடனும் இணைந்து சிறப்பு பேச்சாளர்களுடன் தொடர்பு கொண்டு பொதுக் கூட்டங்களை சிறப்பாக நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

### பரமக்குடியில்

# இமானுவேல் சேகரன் மணிமண்டபம்

## முதல்வர் ஸ்டாலின் 17– ஆம் தேதி திறந்து வைக்கிறார்

**ராமேசுவரம், ஜன.13**

பரமக்குடியில் வருகிற 17–ஆம் தேதி இமானுவேல் சேகரன் மணிமண்டபத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

பரமக்குடியில் நகராட்சி சந்தை வளாகத்தில் இமானுவேல் சேகரன் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ரூ.3 கோடி மதிப்பில் சிலையுடன் கூடிய மணி மண்டபம் அமைக்க 11.9.2023–ல் தமிழக அரசு உத்தரவிட்டது.

மேலும், இமானுவேல் சேகரனின் பிறந்த நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. நகராட்சிக்கு சொந்தமான சந்தை வளாகப் பகுதியில் மணிமண்டபம் கட்டுமானப் பணிகள் தற்போது நிறை வடைந்துள்ளன. இந்நிலையில், வரும் 17–ஆம் தேதி மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்க வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அன்று பரமக்குடியில் இமானுவேல் சேகரனின் மணி மண்டபத்தை திறந்து வைக்க உள்ளார். இதுகுறித்து அமைச்சர் ராஜகண்ணப்பன் கூறும்போது, "பரமக்குடியில் இமானுவேல் சேகரனுக்கு உருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அதைத் திறப்பதற்காக வரும் 17–ஆம் தேதி முதல்வர் மு.க. ஸ்டாலின் பரமக்குடி வருகிறார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்றார்.

### கேலோ இந்தியா அமைப்பு சார்பில்

# தென் மாநில அளவிலான மகளிர் சைக்கிள் போட்டி

## 330 பெண்கள் பங்கேற்றனர்

**திருப்போரூர், ஜன. 13–**

கேலோ இந்தியா அமைப்பு சார்பில் தென் மாநில அளவிலான மகளிர் சைக்கிள் போட்டிகள் திருப்போரூரில் கடந்த 2 நாட்களாக நடைபெற்றன. இதில், 5 மாநிலங்களைச் சேர்ந்த 330 பெண்கள் பங்கேற்றனர். போட்டிகளில் வென்ற பெண்களுக்கு பரிசுகள்வழங்கப்பட்டன.



தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப் பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் பங்கேற்ற இப்போட்டிகளை கேலோ இந்தியா அமைப்பின் தென் மண்டலப் பிரிவு நடத்தியது. 14 வயது முதல் 16 வயதுக்கு உட்பட்டோர், 16 முதல் 18 வயதுக்கு உட்பட்டோர் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டோர் என 3 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 5 மாநிலங்களைச் சேர்ந்த 330 பெண்கள் கலந்து கொண்டனர்.

ரூ.1.38 லட்சம் பரிசு: இந்தப் போட்டிகளை தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகப் பதிவாளர் லில்லி புஷ்பம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கு தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையப் பொது மேலாளர் எல். சுஜிதா, கோட்டாட்சியர் மணிகண்டன் ஆகியோர் பதக்கங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினர்.

மொத்தம் ரூ.1.38 லட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு சைக்கிள்சங்கத்தலைவர் எம். சுதாகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# விஜய் கைகாட்டுபவர்களே எம்.எல்.ஏ.க்கள் ஆவர்

## செங்கோட்டையன் பேட்டி

**நீலகிரி, ஜன.13**

விஜய் கைகாட்டுபவர்களே எம்.எல்.ஏ.க்கள் ஆவர் என செங்கோட்டையன் கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் படுகர் இன மக்களின் குல தெய்வமான ஹெத்தையம்மன் திருவிழா நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் அங்கு தமிழக வெற்றிக் கழக நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளரும், ஈரோடு, கோவை, திருப்பூர், நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களின் அமைப்பு செயலாளருமான செங்கோட்டையன் ஹெத்தையம்மன் கோவிலுக்கு கட்சியினருடன் சென்று காணிக்கை செலுத்தி வழிபட்டார்.



பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் படுகர் இன மக்களின் முக்கிய நிகழ்வான ஹெத்தையம்மன் திருவிழாவில் பங்கேற்று வழிபடுவதற்காக இங்கு வந்தேன். நீலகிரியில் 3 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன.

வருகிற சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. தலைவர் விஜய் யாரை கைகாட்டுகிறாரோ, அவர்கள் தான் அந்த 3 தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

### அன்புமணி அணியில் உள்ள

# 3 எம்.எல்.ஏ.க்கள் பா.ம.க.வில் இருந்து நீக்கம்

## ராமதாஸ் அறிவிப்பு

**சென்னை, ஜன. 12–**

பாமகவில் மக்களவைத் தேர்தல் கூட்டணி தொடர்பாகவும் 2026 சட்டமன்ற தேர்தல் கூட்டணி தொடர்பாகவும் தந்தை மகன் இடையேமோதல்வெடித்தது.அப்போது ஏற்பட்ட மோதல் சட்டமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில் தற்போது உச்சத்தை சந்தித்திருக்கிறது. தொடர்ந்து இறுதி தரப்பும் ஆதரவாளர்களை நீக்குவதும், சேர்ப்பதுமாக அதிரடி காட்டி வருகின்றனர்.தேர்தல் ஆணையம், நீதிமன்றம் ஆகியவை அன்புமணி ராமதாஸ் பாமகவின் தலைவராகவும் கட்சியின், சின்னம், பெயர், கொடி உள்ளிட்டவை அவருக்குத்தான் சொந்தம் என அங்கீகரித்ததாக சொல்லப்படுகிறது. ஆனால், இதனை ராமதாஸ் மறுத்து வருகிறார்.

இரு தரப்பும் மாறி மாறி எதிர் தரப்பினரை நீக்கி வருகிறார்கள்.

இந்த நிலையில், அன்புமணி ஆதரவாளர்களான மூன்று எம்.எல்.ஏக்களை பாமகவில் இருந்து நீக்குவதாக ராமதாஸ் அறிவித்துள்ளார்.

சிவக்குமார், சதாசிவம், வெங்கடேஷ்வரன் ஆகிய மூன்று பேரை பாமகவில் இருந்து நீக்குவதாக ராமதாஸ் அறிவித்துள்ளார்.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறி மூன்று பேர் மீது ராமதாஸ் இந்த நடவடிக்கை எடுத்துள்ளார்.



உடுமலை திருமூர்த்தி அணை பனி போர்த்தி காணப்படுவதை படத்தில் காணலாம்.

---

மெட்ராஸ் மணி

ஜன 13 2026 செவ்வாய்க்கிழமை

# பிடிஆரை எதிர்த்து நிற்க பிரியப்படும் பாஜக! - மதுரை மத்திக்கு அதிமுகவிடம் 'விருப்ப மனு'

மதுரை மத்திய தொகுதியில் இரண்டாவது முறையாக வெற்றி பெற்று அமைச்சரானவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன். கட்சித் தலைமையுடன் மிக நெருக்கமாக இருந்ததால் திமுக ஆட்சி அமைந்ததும், இவருக்கு நிதியமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது.

மதுரைமேயர்தேர்தலிலும்இவர்சொன்னவருக்கே வாய்ப்பளிக்கப்பட்டது. இதனால் அதிகாரத்தில் கொடிகட்டிப்பறந்ததியாகராஜன், ஆடியோவிவகார சர்ச்சையில் சிக்கியதால் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு மாற்றப்பட்டார். இதையடுத்து, உள்ளூர் அரசியலில் தியாகராஜனின் செல்வாக்கு சரிய ஆரம்பித்தது. இதனால், அவரது விசுவாசிகள் பலரும் அவரது அரசியல் எதிரியான மாவட்டச் செயலாளர் தளபதியின் பக்கம் சாய்ந்தனர்.

இப்படியானசறுக்கல்கள்இருந்தாலும்மூன்றாவது முறையாக மதுரை மத்தியிலேயே களமிறங்க தயாராகி வருகிறார் பழனிவேல் தியாகராஜன். இந்த நிலையில், அதிமுக கூட்டணியில் தங்களுக்காக மதுரை மத்தி, வடக்கு, திருப்பரங்குன்றம் ஆகிய மூன்று தொகுதிகளை கேட்கிறது பாஜக. இதில், வடக்கு தொகுதியை பாஜக-வில் இருந்து அதிமுக-வுக்கு வந்த டாக்டர் சரவணன் கேட்கிறார். திருப்பரங்குன்றம் மதுரை புறநகர் கிழக்கு மாவட்டச் செயலாளர் ராஜன் செல்லப்பாவின் சிட்டிங் தொகுதி என்பதால் அதை விட்டுத்தராது அதிமுக. இதையெல்லாம் கணக்கிட்டு மத்திய தொகுதிக்கு பாஜக தரப்பில் கூடுதல் அழுத்தம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய மதுரை அதிமுக நிர்வாகிகள், ''அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தனது தொகுதியில் வேலைவாய்ப்பு, பெரிய வளர்ச்சித்திட்டங்கள் எதற்கும் வழிசெய்யவில்லை. தொகுதி மக்களுடனும் பெரிதாக தொடர்பில் இல்லை. சொந்தக்கட்சிக்குள்ளும்அவருக்குபிடிமானம்இல்லை. மாநகராட்சி சொத்து வரி முறைகேடு விவகாரத்தில் பிடிஆரின் ஆதரவாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதைத் தடுத்து நிறுத்த அவர் எதுவும் செய்யவில்லை என்பதால் அவரது விசுவாசிகளே அவருக்கு எதிராக நிற்கிறார்கள். இந்த நிலையில், பாஜக அரசுக்கு எதிராக பிடிஆர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகிறார். அதனால், அவரோடு நாமே மோதிப் பார்க்க வேண்டும் என நினைக்கிறது பாஜக'' என்றனர்.

''உட்கட்சி பூசல், அதிமுக வாக்கு வங்கி, வடமாநிலத்தவர்கள் அதிகம் வசிக்கும் தொகுதி உள்ளிட்ட காரணிகளை வைத்து பிடிஆரை எளிதில் வீழ்த்தி விடலாம் என நினைக்கிறது பாஜக. ஆனால், இந்தத்தொகுதியில்முஸ்லிம்களும்கிறிஸ்தவர்களும் கணிசமாக இருப்பது பிடிஆருக்கு இம்முறையும் கைகொடுக்கும்'' என்றும் சிலர் சொல்கிறார்கள்.

பிடிஆரின் ஆதரவாளர்களோ, ''இரண்டு முறையுமே ஓட்டுக்கு காசு கொடுக்காமல் தான் வெற்றிபெற்றார் பிடிஆர். இம்முறையும் அப்படித்தான் மக்களைச் சந்திப்பார். அரசியலுக்கு அப்பாற்பட்டுஅவருக்கெனதனிப்பட்டசெல்வாக்கு தொகுதி மக்களிடம் உள்ளது. தொகுதிக்காக என்னவெல்லாம் செய்திருக்கிறார் என்பது மக்களுக்குத் தெரியும். தலைமையும் அவர் மீது மிகப்பெரிய நம்பிக்கை வைத்துள்ளது. அதனால், தன்னை எதிர்க்க எந்தக் கட்சி வந்தாலும் மூன்றாவது முறையாகவும் அவர் முடிசூடுவார்'' என்கிறார்கள்.

---

# ஜன.23-ஆம் தேதி ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

## வைகோ அறிவிப்பு

**மதுரை, ஜன.13–**

வருகிற 23–ம் தேதி ம.தி.மு.க. ஆம் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்ட அறிக்கையில், "மதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் தலைமையில், ஜன.23–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில், தலைமைக் கழகம் தாயகத்தில் நடைபெறும்." என அறிவித்துள்ளார். இந்த கூட்டத்தில் சட்டப்பேரவை தேர்தலுக்கான பூத் கமிட்டி அமைத்தல், உறுப்பினர் சேர்க்கை மற்றும் கூட்டணி விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

# ஓய்வு பெற்ற அதிகாரியிடம் ரூ.1.23 கோடி மோசடி

## ஏமாற்றியவர் கைது

**சென்னை, ஜன. 13**

வில்லிவாக்கத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மின் வாரிய அதிகாரி மகேந்திரன் (வயது 66). இவரை செல்போனில் அழைத்து பேசிய நபர் "ஆன்லைன் பங்குச்சந்தையில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும். இதற்கு தேவையான உதவிகளை செய்து தருகிறேன்" என ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இதை நம்பிய மகேந்திரன் அந்த நபர் அறிவுறுத்திய பங்கில் முதலீடு செய்துள்ளார். அதன்படி அதிக லாபம் கிடைத்து ள்ளது. அந்தலாபபணத்தைஅவர் எடுக்க முயன்றபோது முடி யவில்லை.

இதுகுறித்து கேட்டபோது, மேலும் பணத்தை முதலீடு செய்ய அறிவுறுத்தியுள்ளனர். இதையடுத்து மகேந்திரன் பல்வேறு தவணைகளாக அவர்கள் குறிப்பிட்ட வங்கிக் கணக்குகளில் ரூ.1.23 கோடி செலுத்தியுள்ளார்.ஆனால் அவர் செய்த முதலீடு, அதற்கான லாபம் எதுவும் கிடைக்க வில்லை.தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மகேந்திரன், அளித்த புகாரின்பேரில் சைபர் கிரைம் போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் பண மோசடியில் ஈடுபட்டது ஈரோடு மூலப்பாளையத்தைச் சேர்ந்த செந்தில் குமார் (வயது 41) என்பது தெரியவந்தது.

இவர் அங்குள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் மேலாளராகவும் பணி செய்து வந்துள்ளார்.

இதையடுத்து அவரை போலீசார் கைது செய்து விசாரிக்கின்ற னர்.



தமிழகம் எல்லை அருகே 200 அடி பள்ளத்தில் லாரி கவிழ்ந்தது. கிரேன் உதவியுடன் லாரி மீட்கப்பட்டது.

### கூடலூரில்

# கேரள லாட்டரி சீட்டு விற்றவர் கைது

**கூடலூர், ஜன. 13**

தேனி மாவட்டம் கூடலூரில், தடை செய்யப்பட்ட லாட்டரி டிக்கெட்டுகள் வைத்திருந்தவரை போலீசார் கைது செய்தனர்.

தேனி மாவட்டம் கூடலூர்தெற்குகாவல்நிலைய சிறப்பு சப்–இன்ஸ்பெக்டர்அன்பழகன் தலைமையில்போலீஸார்கள்குற்றத் தடுப்பு சம்பந்தமாக, கூடலூர் குமுளி மெயின் ரோடு பெட்ரோல் பங்க் அருகே ரோந்து சென்றனர். அப்போது அப்பகுதியில் சந்தேகப்படும்படி நின்றிருந்த ஒருவரை பிடித்து விசாரணை நடத்தினர்.

அவர் முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறியதால் போலீஸார்கள் அவரை சோதனை செய்தனர். அப்போது அவரிடம் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட, தலா ரூபாய் 50 மதிப்பிலான 56 தடை செய்யப்பட்ட கேரள மாநில லாட்டரி டிக்கெட்டுகளும், தலா ரூபாய் 400 மதிப்பிலான 2 லாட்டரி டிக்கெட்டுகளும் இருந்தது.

இதை அடுத்து போலீசார்கள் அவரிடம் நடத்தி விசாரணையில், தேனி மாவட்டம் உப்பார்பட்டி நடுத்தெருவை சேர்ந்த மணி(48) என்பதும், அவர் கேரளாவில் இருந்து லாட்டரி டிக்கெட்டுகள் மொத்தமாக வாங்கி இப்பகுதியில் விற்பனை செய்து வந்ததும் தெரியவந்தது. இதை அடுத்து லாட்டரி டிக்கெட்டுகளை பறிமுதல் செய்த போலீசார்கள் வழக்குப்பதிவு செய்து மணியை கைது செய்தனர்.


**SURYODAY** A BANK OF SMILES

**சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்**
பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: 1101, ஷார்தா டெரஸஸ், ப்ளாட் 65, செக்டர் - 11, சிபிடி பேலாப்பூர், நவி மும்பை - 400614. CIN: L65923MH2008PLC261472.

நிதிச் சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் சட்டம், 2002-இன் பிரிவு 13 (2)-இன் கீழ்மேற்கண்ட நான், நிதிச் சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் சட்டம், 2002-இன் கீழ் மெஸ்ஸர்ஸ் சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட் ("SSFBL") நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆவேன். மேலும், பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள், 2002-இன் விதி 3 உடன் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, பின்வரும் கடன் வாங்கியவர்(கள்), இணை-கடன் வாங்கியவர்(கள்), உத்தரவாதம் அளித்தவர்(கள்) ஆகியோரை, அந்தந்த அறிவிப்புகள் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், தேதி வரையிலான வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் உட்பட முழு நிலுவைத் தொகையையும் செலுத்தி, நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தங்கள் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றுமாறு கோரி, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டுள்ளேன். மேலும், கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்த அறிவிப்பின் வெளியீடு உங்களுக்கு மாற்று சேவையாகும். கடனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துவதற்கான பாதுகாப்பாக, பின்வரும் பிணையச் சொத்து(கள்) அந்தந்த கடன் வாங்கியவர்(கள்), இணை-கடன் வாங்கியவர்(கள்), உத்தரவாதம் அளித்தவர்(கள்) ஆகியோரால் SSFBL நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

| கடன் வாங்கியவர் / இணை-கடன் வாங்கியவர் / உத்தரவாதம் அளித்தவரின் பெயர் | | |
|---|---|---|
| 257000025308, 257000025317 1. திரு. வெங்கடாசலம் கே. S/o கிட்டன் 2. திருமதி. வி. தங்கமணி W/o வெங்கடாசலம் கே. | கோரிக்கை அறிவிப்பின் தேதி | 17.12.2025 |
| | NPA தேதி | 09.12.2025 |
| | மொத்த நிலுவைத் தொகை ரூ. | ரூ. 15,07,669.18/- 11.12.2025 நிலவரப்படி |

**பிணையமாக வைக்கப்பட்ட சொத்து(கள்) / அசையாச் சொத்தின் விளக்கம்:** பழைய சர்வே எண் 169/1B, உட்பிரிவுக்குப் பிறகு சர்வே எண் 169/1B1, பட்டா எண் 170, சைட் எண் 2, வீரகேரளம் கிராமம், தொண்டாமுத்தூர் சார் பதிவாளர் அலுவலகம், பேரூர் வட்டம், 641007, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர், தமிழ்நாடு என்ற முகவரியில் அமைந்துள்ள நிலத்தின் முழுப் பகுதி. மொத்த பரப்பளவு 1050 சதுர அடி. எல்லைகள்: கிழக்கு: சைட் எண் 3, மேற்கு: சைட் எண் 1, வடக்கு: 23 அடி அகலமுள்ள கிழக்கு-மேற்கு லேஅவுட் சாலை, தெற்கு: பாலசுந்தரம் நிலம்.

**தேதி: 13.01.2026, இடம்: தமிழ்நாடு,** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்**


### பாக்மதி விரைவு ரயில் விபத்தில்

# சாதுர்யமாக செயல்பட்ட ரயில் ஓட்டுநருக்கு விசிஷ்ட சேவா விருது

## தெற்கு ரயில்வே பொதுமேலாளர் வழங்கினார்

**சென்னை,ஜன.13–**

கவரைப்பேட்டையில் பாக்மதி விரைவு ரயில் விபத்தின்போது, சாதுர்யமாக செயல்பட்ட ரயில் ஓட்டுநர் சுப்பிரமணி உட்பட 11 பேருக்கு விசிஷ்ட ரயில் சேவா விருதுகள் வழங்கப்பட்டன.

இந்திய ரயில்வேயில் கடந்த ஆண்டு சிறப்பாக பணியாற்றிய 100 அதிகாரிகள், ஊழியர்களுக்கு விசிஷ்ட் ரயில் சேவா புரஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன.

டெல்லியில் கடந்த 9ம் தேதி நடந்த நிகழ்ச்சியில், ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் விருதுகளை வழங்கி கவுரவித்தார். நிதி, எலெக்ரிக்கல் மற்றும் சுற்றுச்சூழல் பிரிவுகளில் தெற்கு ரயில்வேக்கான 3 கேடயங்களை தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங்கிடம் அமைச்சர் வழங்கினார்.



தெற்கு ரயில்வேயின் துணை நிதி ஆலோசகர் ஆனந்த் பன்டியா, மதுரை கோட்டை மூத்த வணிக மேலாளர் கணேஷ், திருவனந்தபுரம் முதுநிலை டெலிகாம்

பொறியாளர் ரஞ்சித், தலைமை சுகாதாரத்துறை ஆய்வாளர் பிரமோத், ரயில்பாதை பராமரிப்பாளர் பவன்குமார், ரயில் ஓட்டுநர் சுப்பிரமணி உட்பட 11 பேருக்கு விசிஷ்ட் ரயில் சேவா புரஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன. கர்நாடக மாநிலம் மைசூருவில் இருந்து பிஹார் மாநிலம் தர்பங்காவுக்கு புறப்பட்ட பாக்மதி அதிவிரைவு ரயில், கடந்த 2024ம் ஆண்டு அக்டோபர் 11ம் தேதி திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை ரயில் நிலையம் அருகே சென்றபோது, ஏற்கெனவே நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது. அந்த ரயிலின் 13 பெட்டிகள் தடம்புரண்டதில் 19 பேர் காயமடைந்தனர், அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

இந்த விபத்து குறித்து, ஆய்வு மேற்கொண்ட தென் மண்டல ரயில்வே பாதுகாப்பு ஆணையரக அதிகாரிகள் குழு, பாக்மதி அதிவிரைவு ரயிலை இயக்கிய ஓட்டுநர் சுப்பிரமணி, துரிதமாக செயல்பட்டு அவசரகால பிரேக்கை பயன்படுத்தியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டதாக அறிக்கை அளித்தனர்.

இந்நிலையில் அவரைபாராட்டி விசிஷ்ட் ரயில் சேவா புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது.

### எஸ்.ஐ.க்கு அரிவாள் வெட்டு

# குற்றவாளியை போலீசார் சுட்டுப்பிடித்தனர்

**திண்டுக்கல்,ஜன.13–**

திண்டுக்கல் மேட்டுப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் விக்னு (என்ற) விக்னேஷ்(31). இவர் மீது மூன்று கொலை வழக்குகள் மற்றும் 15–க்கு மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளது. சரித்திர பதிவேடு குற்றவாளி.

இவர் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து திண்டுக்கல் பகுதியில் கொலை சம்பவங்களை நடத்துவதற்கு திட்டம் தீட்டி வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.





இதனைத் தொடர்ந்து திண்டுக்கல் நகர் டி.எஸ்.பி. கார்த்திக்தலைமையில் தெற்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஜான்சன் உள்ளிட்ட தனிப்படையினர் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு மேலாக தேடுதல் வேட்டை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் நேற்று மாலைதிண்டுக்கல்பேகம்பூர்பகுதியில்உள்ள சி.கே. சி.எம் காலனி அருகே விக்னேஷ் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது.

இந்த தகவலை தொடர்ந்து நகர் டி எஸ் பி கார்த்திக் மற்றும் சார்பு ஆய்வாளர் ஜான்சன் விக்னேஷை பிடிப்பதற்கு சென்றுள்ளார்.

அப்பொழுது விக்னேஷ் அங்கிருந்து தப்புவதற்காக தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் சார்பு ஆய்வாளரை வெட்டியதில் அவருக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து உடன் சென்ற டிஎஸ்பி கார்த்திக் சார்பு ஆய்வாளரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக துப்பாக்கியால் இடது கால் முட்டியில் சுட்டார்.

மேலும் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்த நிலையில் இருவரையும் மீட்டு போலீசார் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். தொடர்ந்து போலீசார் அவரது கூட்டாளிகளை பிடிக்க தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.


**பொது அறிவிப்பு**

கேசியோ ரீடெய்லர் பிரைவேட் லிமிடெட் பதிவுசெய்யப்பட்ட அலுவலக கதவு எண். 64G, குதிராம் போஸ் சரணிபிளாட் 3A, கொல்கத்தா, மேற்கு வங்கம் PIN-700 037. தொலைபேசி: 79945 92589 வலைத்தளம்: www.casiocare.com, info@casiocare.com

கேசியோ ரீடெய்லர் பிரைவேட் லிமிடெட் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பு. ஏப்ரல் 13, 2026 முதல் பின்வரும் கிளைகளின் செயல்பாடுகள் நிறுத்தப்படும். கிளை பெயர்:

| |
|---|
| அல்லிநகரம் - முதல் தளம், கதவு எண்.1653/2, கம்பம் நேருஜி சாலை, அல்லிநகரம், தேனி-62553 |
| போடிநாயக்கனூர் முதல் தளம், கதவு எண்.726, பிரசாத் வளாகம், போடிநாயக்கனூர் அஞ்சல், தேனி-625513 |
| சின்னமனூர் முதல் தளம், கதவு எண்.102/1, பிரதான சாலை, தேரடி அருகில், அழகர்சாமி சீதையம்மாள் வளாகம், சின்னமனூர், உத்தமபாளையம், தேனி-625534 |
| ஈத்தாமொழி - கதவு எண்:19/13/3, எதிரில். அப்பல்லோ மெடிக்கல் கன்னியாகுமரி மெயின் ரோடு, ஏத்தாமொழி சந்திப்பு, ஏத்தாமொழி-629501 |
| குண்டுல்பேட்டை-கதவு எண். KMRPW 1 ரங்கநாத காம்ப்ளக்ஸ், நாயக்கரா பீடா சாலை, 30 VM சாலை, குண்ட்லுப்பேட்டை, சாமராஜநகரா மாவட்டம்-571111 |
| கோவைபுதூர் தரைத்தளம், கதவு எண்.T-114A, கோவைபுதூர், கோயம்புத்தூர்-641042 |
| மதுக்கரை - தரை தளம், கதவு எண்.113/1,114,115, காந்தி நகர், பாலக்காடு பிரதான சாலை, மதுக்கரை, கோயம்புத்தூர்-641105 |
| திங்கட்கிழமை சந்தை - முதல் தளம், கதவு எண்.2/7A3, LT கட்டிடம், திங்கள் நகர், தலக்குளம் சாலை, நெய்யூர், கன்னியாகுமரி-629802 |
| சிவகங்கை கதவு எண்.47/3, தங்கவன்ஷி காம்ப்ளக்ஸ், மேலரத வீதி, சிவகங்கை P.O, தமிழ்நாடு-630561 |
| தேனி தரைத்தளம், கதவு எண்.2A, மதுரை சாலை, தேனி அனந்தம் அருகில், தேனி-625531 |
| வெல்லமடம் தரைத்தளம், கதவு எண்.1/15, பிரதான சாலை, வெள்ளமடம், கன்னியாகுமரி-629302 |

அனைத்து முதலீட்டு கணக்கு வாடிக்கையாளர்களும் நிறுவனத்தின் கார்ப்பரேட் அலுவலகம் மூலம் சேவையை தொடர்ந்து அணுக முடியும். விவரங்கள் நிறுவனத்தின் வலைத்தளத்தில் கிடைக்கும்.

**இடம்: தமிழ்நாடு, தேதி: 13.01.2026** **ஒப்பம்/-, அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்**


### ஆலங்குடி அருகே முன் விரோதத்தால்

# வாலிபர் வெட்டி படுகொலை

## 4 பேர் கொண்ட கும்பலுக்கு வலைவீச்சு

**ஆலங்குடி ஜன 13**

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வேப்பங்குடி ஊராட்சியை சேர்ந்த இன்பரசு வயது (23) தினக்கூலி சென்ட்ரிங்வேலைசெய்து வருகிறார். நேற்று மாலை வேலை முடித்துக் கொண்டு வேப்பங்குடிக்கு செல்லும் பொழுது அழகாம்பாபுரத்தில் அருகில் அவரை பின் தொடர்ந்து வந்த நான்கு பேர் வழிமறித்து சரமாரியாக வெட்டி கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பி சென்று விட்டனர் அன்பரசு உடலில் என்ற வாலிபரை மர்ம நபர்கள் உடலில் 7 இடங்களில் வெட்டுக்காயம் இருந்துள்ளது.

வாலிபர் கொலை

இதையடுத்து அருகில் உள்ளவர்கள் கூச்சலிட்டதும் அங்கிருந்து அவர்கள் தப்பியோ ஓடிவிட்டனர் தகவல் அறிந்ததும் வல்லத்திராக்கோட்டை போலீசார் மற்றும் இன்ஸ்பெக்டர் மற்றும் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பிரேதத்தை கைப்பற்றி புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக கொண்டு சென்றனர் அன்பரசு கொலை தொடர்பாக குள்ளத்தூர் மாவட்ட போலீசார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். அப்போது வேப்பங்குடியை சேர்ந்த நடுவருக்கும் மற்றவர்களுக்கும் ஜல்லிக்கட்டு போட்டி முன் விரோதம் இருப்பதாக தெரிய வந்து என போலீசார் தெரிவித்தனர் இந்த கொலை செய்தவர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

### கடந்த 2 நாட்களில்

# பொங்கல் சிறப்பு பேருந்துகளில் 2.50 லட்சம் பேர் பயணம்

## போக்குவரத்து துறை தகவல்

**சென்னை, ஜன.13–**

பொங்கல்சிறப்புபேருந்துகளில் இரண்டு நாட்களில் 2.47 லட்சம் பேர் பயணம் செய்துள்ளதாக போக்குவரத்துதுறை தெரிவித்துள்ளது. பொங்கல் பண்டிகையை கொண்டாட சொந்த ஊர்களுக்குச் செல்லும் மக்களுக்காக ஆண்டுதோறும் தமிழக அரசு சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.

2,092 பேருந்துகள் இயக்கம்: அந்த வகையில் கடந்தஜன.9ம் தேதி முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. சென்னையில் இருந்து தினமும் 2,092 பேருந்துகள் இயக்கப்படும் நிலையில், கடந்த 9ம் தேதி கூடுதலாக 614 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. அதன்படி அன்றைய தினம் சென்னையில் இருந்து இயக்கப்பட்ட 2,706 பேருந்துகளில் மொத்தம் 1 லட்சத்து 21,770 பேர் பயணம் செய்துள்ளனர். இதேபோல நேற்று முன் தினம் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன், கூடுதலாக 712 சிறப்பு பேருந்துகள் என மொத்தம் 2,804 பேருந்துகள் இயக்கப்பட்டன.

இந்த பேருந்துகளில் 1 லட்சத்து 26,180 பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர், கடந்த ஜன.9 மற்றும் 10 ஆகிய 2 நாட்களில் மொத்தம் 5,510 பேருந்துகள் இயக்கப்பட்டு, 2 லட்சத்து 47,180 பயணிகள் பயணம் மேற்கொண்டதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது. மேலும் இந்த சிறப்பு பேருந்துகள் வரும் 14ம் தேதி வரை இயக்கப்படவுள்ளது. இன்று (ஜன.12) சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 2200 பேருந்துகள் என மொத்தம் 4,292 பேருந்துகளும், நாளை வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 2,790 பேருந்துகள் என மொத்தம் 4,882 பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன. இதுவரை சென்னையிலிருந்து 2 லட்சத்து 18,900 பயணிகள் முன்பதிவு செய்துள்ளதாக போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.


**ஜம்மு & காஷ்மீர் வங்கி லிமிடெட்** J&K Bank Serving to Empower

வணிக பிரிவு: தி.நகர் சென்னை. எண் 60, ரெயின்போ ஆர்கேட், தியாகராய சாலை, பாண்டி பஜார், சென்னை-600017, T+044-24313851-52-53 Etchnai@jkbmail.com Wwww.jkbank.net

**உடைமை அறிவிப்பு, பாதுகாப்பு (அமலாக்க) வட்டி விதிகள், 2002இன் விதி 8 (1)உடன் இணைத்து படிக்கப்படும், சார்ஃபேசி சட்டம், 2002இன் பிரிவு 13 (4)இன் கீழ் வழங்கப்படும் அறிவிப்பு**

ஜம்மு & காஷ்மீர் வங்கி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, நிதிச் சொத்துக்களைப் பத்திரப்படுத்துதல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் (SARFAESI) சட்டம், 2002இன் கீழ் ... [illegible]

**தேதி: 09.01.2026** **ஒப்பம்/ திரு. வினய் குமார்**
**இடம்: சென்னை** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**

**ஜம்மு & காஷ்மீர் வங்கி லிமிடெட்** J&K Bank Serving to Empower

வணிக பிரிவு: தி.நகர் சென்னை. எண் 60, ரெயின்போ ஆர்கேட், தியாகராய சாலை, பாண்டி பஜார், சென்னை-600017, T+044-24313851-52-53 Etchnai@jkbmail.com Wwww.jkbank.net

**உடைமை அறிவிப்பு, பாதுகாப்பு (அமலாக்க) வட்டி விதிகள், 2002இன் விதி 8 (1)உடன் இணைத்து படிக்கப்படும், சார்ஃபேசி சட்டம், 2002இன் பிரிவு 13 (4)இன் கீழ் வழங்கப்படும் அறிவிப்பு**

[illegible]

**தேதி: 09.01.2026** **ஒப்பம்/ திரு. வினய் குமார்**
**இடம்: சென்னை** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**

**ஜம்மு & காஷ்மீர் வங்கி லிமிடெட்** J&K Bank Serving to Empower

வணிக பிரிவு: தி.நகர் சென்னை. எண் 60, ரெயின்போ ஆர்கேட், தியாகராய சாலை, பாண்டி பஜார், சென்னை-600017, T+044-24313851-52-53 Etchnai@jkbmail.com Wwww.jkbank.net

**உடைமை அறிவிப்பு, பாதுகாப்பு (அமலாக்க) வட்டி விதிகள், 2002இன் விதி 8 (1)உடன் இணைத்து படிக்கப்படும், சார்ஃபேசி சட்டம், 2002இன் பிரிவு 13 (4)இன் கீழ் வழங்கப்படும் அறிவிப்பு**

[illegible]

**தேதி: 09.01.2026** **ஒப்பம்/ திரு. வினய் குமார்**
**இடம்: சென்னை** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**

**BAJAJ FINANCE** **பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்**

[illegible]

**ICICI Home Finance** **கார்ப்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059, இந்தியா
**கிளை அலுவலகம்:** லயன் ஆர்கேட், 1ஏ, முதல் தளம், மதுரை சாலை, மேற்குத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி-627001

**தனிப்பட்ட ஒப்பந்தம் மூலம் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு**

நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் சட்டம், 2002 உடன் பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள், 2002-இன் விதி 8(8) மற்றும் விதி 9(1)-ஐ இணைத்துப் படிக்கப்பட்டதன் கீழ், தனிப்பட்ட ஒப்பந்தம் மூலம் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்புஜசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (ஐசிஐசிஐ HFC) கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்காக பல மின்-ஏலங்களை நடத்தியது, இருப்பினும், அத்தகைய அனைத்து மின்-ஏலங்களும் தோல்வியடைந்தன. இப்போது, ஒரு ஆர்வமுள்ள வாங்குபவர் மேற்கூறிய சொத்தை ரூ. 7,00,000/- தொகைக்கு வாங்குவதற்கான ஒரு சலுகையுடன் ஐசிஐசிஐ எச்எஃப்சி-ஐ அணுகியுள்ளார். பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன் வாங்கியவர்(கள்) மற்றும் உத்தரவாதம் அளித்தவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரிடம் அடமானம்/பிணையமாக வைக்கப்பட்ட, கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து, அதன் உடைமை ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்டுள்ளது, கீழ்க்கண்ட சுருக்கமான விவரங்களின்படி, "உள்ளபடியே", "இருக்கும் நிலையிலேயே", மற்றும் "என்ன இருக்கிறதோ அப்படியே" என்ற அடிப்படையில் தனிப்பட்ட ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யப்படும்;

| வ எண் | கடன் வாங்கியவர்(கள்)/கூட்டுக் கடன் வாங்கியவர்கள்/ உத்தரவாதம் அளித்தவர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகளின் பெயர். கடன் கணக்கு எண். | தெரிந்த சுமைகளுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட சொத்து(களின்) விவரங்கள், ஏதேனும் இருந்தால் | நிலுவைத் தொகை | இருப்பு விலை / முன்பண வைப்புத் தொகை | சொத்தை ஆய்வு செய்யும் தேதி மற்றும் நேரம் | ஏலத்தின் தேதி மற்றும் நேரம் | ஏலத் தேதிக்கு ஒரு நாள் முன்பு | SARFAESI நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) | (ஐ) |
| | செல்வ முத்துக் கிருஷ்ணன் பி (கடன் வாங்கியவர்) ஜெயசங்கரி கே (கூட்டுக் கடன் வாங்கியவர்கள்) கடன் எண். NHTV100000848520 | சர்வே எண். 1059/1A, பிளாக் எண். 28, டி எஸ் எண். 20, மேலப்பாளையம் வார்டு எண். 26, அனையார்குளம் கிழக்கு பக்கம், குலவணிகர்புரம் கிராமம், பாளையங்கோட்டை தாலுகா, தமிழ்நாடு- 627801 | ரூ. 21,28, 074/- ஜனவரி 06 2026 | ரூ. 7,00,000/- / ரூ. 70,000/- | ஜனவரி 22, 2026 காலை 11:00 மணி முதல் மதியம் 03:00 மணி வரை | ஜனவரி 29, 2026 காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை | ஜனவரி 28, 2026 மாலை 04:00 மணிக்கு முன் | சுவாதீனம் உடைமை |

இந்த ஆன்லைன் ஏலம், எங்களின் ஏல முகமையான வேல்யூட்ரஸ்ட் கேபிடல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இணையதளத்தில் (URL இணைப்பு- https://BidDeal.in) நடத்தப்படும். ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள், முன்பண வைப்புத்தொகையை (EMD) RTGS/டிமாண்ட் டிராஃப்ட் (DD) (பத்தி E-ஐப் பார்க்கவும்) மூலம், இந்தக் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கிளை அலுவலக முகவரியில், ஜனவரி 28, 2026 அன்று மாலை 04:00 மணிக்கு முன்பாகச் சமர்ப்பிக்க வேண்டும். ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள், பதிவுப் படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலையும், இந்தக் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், கிளை அலுவலக முகவரியில், ஜனவரி 28, 2026 அன்று மாலை 05:00 மணிக்கு முன்பாகச் சமர்ப்பிக்க வேண்டும். முன்பண வைப்புத்தொகைக்கான டிமாண்ட் டிராஃப்ட் (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/பட்டியலிடப்பட்ட வங்கியிலிருந்து, "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட். -Auction" என்ற பெயரில், இந்தக் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை அலுவலக முகவரியில் செலுத்தத்தக்கதாக இருக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிக தொகையை ஏலமாகச் சமர்ப்பிக்குமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்கூறிய ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிக ஏலங்கள் ஐசிஐசிஐ HFC-க்கு வரப்பெறாத பட்சத்தில், அடமானம் வைக்கப்பட்ட சொத்து, பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள், 2002-இன் விதி 8(8) உடன் விதி 9(1)-இன் கீழ், அந்த ஆர்வமுள்ள வாங்குபவருக்கே விற்கப்படும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.ஆய்வு, விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஏலங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு, ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தை 9920807300 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, எந்தவொரு கூடுதல் காரணங்களையும் தெரிவிக்காமல், எந்தவொரு ஏலத்தையும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் உரிமையைக் கொண்டுள்ளார். விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.icicihfc.com என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

**தேதி: ஜனவரி 13, 2026** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்"**
**இடம்: திருநெல்வேலி** **CIN எண்:- U65922MH1999PLC120106**

இயல்புக்கு மாறான வானிலை:

# தமிழகத்தின் வட மாவட்டங்களில் கடும் குளிரால் மக்கள் பாதிப்பு

சென்னை, ஜன. 13–

சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிரால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இயல்புக்கு மாறான வானிலை காரணமாக கடும் குளிர் நிலவுவதாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலதலைவர்அமுதாதெரிவித்துள்ளார்.கடந்த சில தினங்களாக சென்னை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிர் நிலவி வருகிறது. பொதுமக்கள் ஸ்வெட்டர், மப்ளர் சகிதமாக காலை, மாலை வேளைகளில் வலம் வருகின்றனர். விடுமுறை தினத்தில் கூட குழந்தைகள் அதிகம் வெளியில் விளையாடு வதை பார்க்க முடிய வில்லை. இருசக்கர வாகனங்களில் செல்லும்போது, குளிர்நடுங்கச் செய்கிறது. சென்னை, புறநகர் பகுதிகள் ஊட்டி, கொடைக்கானல்போன்று மாறியது. மெரினா கடற்கரைக்கு மாலை நேரங்களில் ஸ்வெட்டர் அணிந்து தான்மக்கள்வருகின்றனர்.



வீடுகளில் தரை ஐஸ் கட்டி போல ஜில் என இருக்கிறது. இந்த கடும் குளிரால் இருமல், காய்ச்சல் உள்ளிட்ட பாதிப்புகளும் ஏற்படுகின்றன.இது போன்ற கடும் குளிர் நிலவுவதற்கான காரணம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி. அமுதா கூறியதாவது:– கடந்த 1891 முதல் 2026 வரை ஜனவரி மாதத்தில் 21 முறைதான் காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள் உருவாகியுள்ளன. இந்த ஆண்டு ஜனவரியில் இலங்கை அருகே காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்றது. இது வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக மன்னார் வளைகுடா அருகே நீடித்து வருகிறது. ஏற்கனவே வட மாநிலங்களில் குளிர் அலையின் தாக்கம் உள்ளது. வளிமண்டல மேலடுக்குகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக, வட மாநிலத்தில் நிலவும் குளிர் காற்று ஈர்க்கப்பட்டு வட தமிழகம் நோக்கி வருகிறது.தெற்கு திசையில் இருந்தும் குளிர் காற்று வட தமிழகம் நோக்கி வருகிறது. கடந்த 4 நாட்களுக்கு மேலாக சூரிய ஒளியே வராத நிலையில், நிலத்திலிருந்து வெளியேறும் வெப்பம் தடைபட்டு, பூமியும் குளிர்ச்சி அடைந்துள்ளது.ரஷ்யா வழியாக சைபீரிய குளிர் அலையின் தாக்கமும் தமிழகம் நோக்கி வருகிறது. இது போன்ற பல்வேறு காரணங்களால் சென்னை உள்ளிட்ட வட தமிழக பகுதிகளில் குளிர் அதிகரித்துள்ளது. இயல்புக்கு மாறான வானிலையால் தான் ஏற்பட்டுள்ளது.

நாம் அனைவரையும் இணைப்பது தமிழ்:

# நம் மொழி, கலாச்சாரம், பண்பாட்டை மறக்க கூடாது

## வெளிநாட்டு வாழ் தமிழர்களுக்கு துணை முதல்வர் வேண்டுகோள்

சென்னை, ஜன. 13–

நாம் அனைவரையும் இணைப்பது தமிழ். நம்முடைய மொழியையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் மறந்துவிடக் கூடாது என்று அயலகத் தமிழர்களைதுணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் "தமிழால் இணைவோம் தரணியில் உயர்வோம்" என்றதலைப்பில் 2 நாள் நடைபெறும் அயலகத் தமிழர் தினம் 2026 விழா சென்னையில் நேற்று தொடங்கியது.

இணையவழியில் நடத்திய பேச்சு, ஒப்புவித்தல், மாறுவேடம், கதை சொல்லுதல் போட்டிகளில் வெற்றிபெற்ற15பேருக்கு சான்றிதழ், காசோலைகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.



தொடர்ந்து, விழா மலரை வெளியிட அமைச்சர் துரைமுருகன் பெற்றுக் கொண்டார். தமிழக அரசின் சார்பில், ரூ.10 லட்சம் மதிப்பிலான இசைக் கருவிகளை மொரீஷியஸ் நாட்டுக்கு பிரதிநிதி மலையப்பனிடம் உதயநிதி வழங்கினார்.

பின்னர் உதயநிதி பேசியதாவது: தமிழ் நம் அனைவரையும் இணைக்ககூடிய மொழி. தமிழ் என்கிற அடையாளத்துக்கு முன்னால், வேறு எந்த அடையாளமும் நிற்க முடியாது. எல்லா பேதங்களையும் தாண்டி நம் அனைவரையும் இணைத்திருப்பது நம்முடைய தாய் மொழித்தமிழ். அப்படி நாம் அனைவரும் தமிழால் இணைந்ததால்தான், இன்றைக்குதரணியை வென்று கொண்டிருக்கிறோம். அயலகத் தமிழர்களுக்கு அரசுதந்த அடையாள அட்டைதான் உங்களுடைய தாய்வீட்டு அடையாளம்.

நம்முடைய மொழியையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் மறந்துவிடக் கூடாது.

ஆண்டுதோறும் வெளிநாட்டில் வாழுகின்ற தமிழர்களுடைய அடுத்த தலைமுறைபிள்ளைகளை தமிழகத்துக்கு அழைத்து வந்து, நம்முடைய பண்பாட்டு சின்னங்களை, அடையாளங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

இந்த உலகத்தில் நமக்கென்று இருக்கின்ற இடம் தமிழகம் என்ற நம்பிக்கை அடுத்த தலைமுறைக்கு நிச்சயம் ஏற்படும். இவ்வாறு பேசினார்.

இந்த விழாவில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், சா.மு.நாசர், எம்.பிக்கள் கலாநிதி வீராசாமி, கவிஞர் சல்மா, அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், துறை ஆணையர்மா.வள்ளலார், கனடா எம்.பி.

ஜூவனிதா நாதன், இலங்கை எம்.பி. வி.எஸ். ராதாகிருஷ்ணன், மலேசியா முன்னாள் துணை அமைச்சர் பி. கமலநாதன் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயிகளை தாக்கியது

# திருக்குறுங்குடியில் கூண்டில் சிக்கிய கரடி

## வனத்துறையினர் காட்டில் விட்டனர்

களக்காடு, ஜன.13

களக்காடு அருகே உள்ள திருக்குறுங்குடி சுற்று வட்டார பகுதியில் விவசாயிகளை தாக்கிய கரடியை வனத்துறையினர் இரும்பு கூண்டில் பிடித்தனர்.

திருக்குறுங்குடி அருகே உள்ளவட்டக்குளம்,நம்பி கோயில் சாலையில் சில மாதங்களாக வனப்பகுதியிலிருந்து கீழே வந்துள்ள கரடி அதிகாலை, இரவு நேரங்களில் வயல் வெளிகள் மற்றும் தனியார் தோட்டங்களில் உலா வந்தது. இந்நிலையில்கடந்தடிசம்பர்மாதம் கரடி தாக்கியதில் திருக்குறுங்குடி வட்டக்குளத்தை சேர்ந்த விவசாயி முருகன் (57), படுகாயமடைந்தார். இதையடுத்து 4 நாட்களுக்கு முன் வயலுக்கு சென்ற வட்டக்குளத்தை சேர்ந்த ராஜ் மனைவி தங்கபுஷ்பத்தையும் (65) கரடி தாக்கியது,காயமடைந்தஅவர்சிகிச்சையில் உள்ளார். இதனால்பொது மக்கள் மிகுந்த அச்சமடைந்தனர். இந்நிலையில் கரடியை இரும்பு கூண்டு வைத்து பிடிக்க வேண்டுமென விவசாயிகள் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் வனத்துறைக்கு கோரிக்கை விடுத்தனர் .இதையடுத்து களக்காடு புலிகள் காப்பக துணை இயக்குனர் (பொ) ஸ்ரீகாந்த் அறிவுரைப்படி, வனச்சரகர் (திருக்குறுங்குடி) யோகேஷ்வரன் தலைமையில் நம்பி கோயில் சாலை வட்டக்குளத்தில் தனியார் தோட்டத்தில் கரடி நடமாட்டமுள்ள பகுதியில் வனத்துறையினர் இரும்பு கூண்டு வைத்தனர்.அதில் கரடிக்கு பிடித்த உணவுகளைவைத்து வனத்துறை ஊழியர்கள் சுழற்சி முறையில் கண்காணித்தனர்.



இதையடுத்து நேற்று இரவு வனத்துறையின் கூண்டுக்குள் கரடி சிக்கி கொண்டது.கூண்டுக்குள் சிக்கிய கரடியை வனத்துறை கால்நடை மருத்துவ குழுவினர் பிரிசோதனை செய்தனர். அதன் பின் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டு களக்காடு வனக்கோட்ட வனச்சரக பகுதியில் கரடி பாதுகாப்பாக விடப்பட்டது.தொடர்ந்து கரடியை கண்காணிக்கும் பணி நடக்கிறது. கரடியை கூண்டில் பிடித்த வனத்துறைக்கு பொது மக்கள்பாராட்டு தெரிவித்தனர். மேலும் புதர்களில் கரடி பதுங்கியுள்ள பகுதிகளில் கூண்டு வைக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தினர். கூண்டில் சிக்கிய கரடியைவனத்துறையினர் இன்று காலை காட்டில் விட்டனர்.

தனி விமானத்தில் சென்றார்

# டெல்லியில் சி.பி.ஐ. முன் விஜய் நேரில் ஆஜர்

## 50 கேள்விகளுடன் அதிகாரிகள் அதிரடி விசாரணை

சென்னை, ஜன. 13–

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக டெல்லியில் நடைபெறும் சி.பி.ஐ. விசாரணையில் நேரில் ஆஜராக த.வெ.க. தலைவர் விஜய் இன்று தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டுச் சென்றார். அங்கு சி.பி.ஐ. முன் ஆஜரான அவரிடம் 50 கேள்விகள் கேட்டு அதிகாரிகள் அதிரடி விசாரணை நடத்தினார்கள்.

கடந்த ஆண்டு 2025 செப்டம்பர் 27–ஆம் தேதி, கரூரில் த.வெ.க. சார்பில் நடைபெற்ற பிரசார நிகழ்ச்சியில் விஜய் பங்கேற்றார். அந்த நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட கடும் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயம் அடைந்தனர். இச்சம்பவம்தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



பொதுமக்கள் பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடுகள், நிகழ்ச்சி ஏற்பாடு தொடர்பான தவறுகள் உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் இந்த சம்பவத்துக்குப் பிறகு எழுந்தன. உயிரிழந்தவர்களின்குடும்பத்தினர் நீதி கோரி போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில், இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் நேரடியாக கண்காணிக்க உத்தரவிட்டது.

அதன்படி, சி.பி.ஐ. விசாரணை தொடங்கப்பட்டது. சி.பி.ஐ. குழுவினர் முதற்கட்டமாக கரூரில் நேரடியாக விசாரணை நடத்தினர். அங்கு சம்பவம் நடந்த இடத்தை ஆய்வு செய்ததுடன், பொதுமக்கள், காவல் துறை அதிகாரிகள் மற்றும் த.வெ.க. நிர்வாகிகளிடம் விசாரணை மேற்கொண்டனர். அக்கட்சியின் பொதுச் செயலாளர்புஸ்சி ஆனந்த், தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா, இணைச் செயலாளர் நிர்மல் குமார், கரூர் மாவட்டச்செயலாளர் மதியழகன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் சி.பி.ஐ. முன்பு ஆஜராகி விளக்கம் அளித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு எப்படி செய்யப்பட்டு இருந்தது, பாதுகாப்பு ஏற்பாடுகள் யார் பொறுப்பில் இருந்தன, கூட்டம் கட்டுப்பாட்டை இழந்தது எப்படி? என்பது போன்ற பல விஷயங்கள் குறித்து அவர்களிடம் விரிவாக விசாரணை நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமையகத்தில் 3 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற விசாரணையிலும் த.வெ.க. நிர்வாகிகள் பங்கேற்று ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பித்தனர்.

இதேபோல் சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விஜயின் பிரசார பேருந்தை சி.பி.ஐ. அதிகாரிகள் ஏற்கனவே பார்வையிட்டு சென்றனர். பின்னர் அந்த பேருந்தை கரூருக்கு எடுத்துச்சென்று பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து நேற்று முன்தினம் விசாரணை நடத்தினார்கள்.

பிரசார பேருந்து டிரைவர் பரணிதரனிடம் கிடுக்கிப்பிடி கேள்விகள் கேட்கப்பட்டன. விசாரணை முடிந்தவுடன் பிரசார பேருந்தை சி.பி.ஐ. அதிகாரிகள் திரும்ப ஒப்படைத்தனர். கரூர்சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் விஜயின் பெயர் இல்லை. எனினும் அவரிடமும் விசாரணை நடத்துவதற்கு அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இந்தநிலையில் விசாரணையின் தொடர்ச்சியாக த.வெ.க. தலைவர் விஜயையும் நேரில் அழைத்து விசாரிக்க சி.பி.ஐ. முடிவு செய்து அவருக்கு சம்மன் அனுப்பியது. இன்று டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் காலை 11 மணிக்கு அவர் ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டு இருந்தது. விசாரணைக்கு சி.பி.ஐ. அலுவலகத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று சம்மன் வந்த நிலையில், முன்னதாக விஜய் தரப்பில் பல கட்ட விவாதங்கள் நடத்தப்பட்டன.

விஜய்க்கு பதிலாக, பொறுப்பாளரை சி.பி.ஐ. விசாரணைக்கு அனுப்பி வைக்கலாமா? என்றுகூட விவாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் மாநில காவல் துறையிடமிருந்து விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்ற வேண்டும் என்று தொடக்கத்தில் கோரிக்கை வைத்ததே த.வெ.க. கட்சிதான். எனவே இப்போது இந்த சம்மனை தவிர்ப்பது சரியல்ல என்றும், அதனால் தான் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க விஜய் முடிவு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த சம்மனை ஏற்று சி.பி.ஐ. முன் ஆஜர் ஆவதற்காக விஜய் இன்று காலை 6 மணியளவில் தனது பனையூர் வீட்டில் இருந்து டெல்லி புறப்பட்டார்.

அவர் தனி விமானத்தில் விஜய் டெல்லிக்குச் சென்றார். அவருடன் தேர்தல் மேலாண்மைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூன், இணைச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார், விஷ்ணு ரெட்டி, ஜெகதீஷ் பழனிசாமி, நயீம், சி. ராஜமோகன் ஆகிய 6 பேர் சென்றனர். ஆனால் த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் செல்லவில்லை.

இதற்கிடையே டெல்லியில் உள்ள லோதி எஸ்டேட் சாலையில் அமைந்துள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் இன்று காலை 11 மணியளவில் விஜய் ஆஜரானார். அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள். விசாரணையின் போது விஜயிடம் கேட்க 50–க்கும் மேற்பட்ட முக்கிய கேள்விகளை சி.பி.ஐ. அதிகாரிகள் தயார் செய்துள்ளதாக தெரிகிறது. மேலும் இன்று தொடங்கும் விசாரணை நாளை (13–ஆம் தேதி), நாளை மறுநாள் (14–ஆம் தேதி) என 3 நாட்கள் வரை நடைபெறலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே விசாரணை முடிந்த பிறகு 14–ஆம் தேதி மாலையில் அவர் டெல்லியில் இருந்து சென்னை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

3 நாள்கள் விசாரணைக்குப் பிறகு இறுதிக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என தெரிகிறது.

டெல்லியில் இன்று நடைபெறும் சி.பி.ஐ. விசாரணைக்கு விஜய் ஆஜரான நிலையில், அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. விசாரணை நடைபெறும் சி.பி.ஐ. அலுவலகம், அவர் தங்கியுள்ள நட்சத்திர ஓட்டல் மற்றும் அவர் செல்லும் அனைத்து இடங்களிலும் அவரது தனிப்பாதுகாவலர்களுடன், மத்திய ரிசர்வ் படை மற்றும் டெல்லி போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தமிழ்நாட்டில் தடை அல்ல

## தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம்


சென்னை:, ஜன.13

நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தமிழ்நாட்டில் தடை விதிக்கப்படவில்லை என தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்து ள்ளது. 'பாதுகாப்பு காரணங்களுக்காக ஹிஜாப் அணிந்து வருவோருக்கு நகை விற்பனை செய்யமாட்டோம்.' என்று நகை வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளதாக செய்தி ஒன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.



இதற்கு பதில் தெரிவிக்கும் விதமாக தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. அதில், தமிழ்நாட்டில் நகைக் கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் தவறாகப் பகிரப்படுகிறது உத்தரப்பிரதேமாநிலம் வாரணாசியில் உள்ள நகைக்கடைகளில் ஹிஜாபுக்ண்கு தடை விதிக்கப்பட்டு உள்ளதாக செய்திகளில் வெளியாகி இருக்கிறது.

தமிழ்நாட்டில் அல்ல. என விளக்கம் அளித்தது.



தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் அடுத்த ஒகேனக்கல்லில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் வருகை குறைந்து காணப்பட்டது. எனினும் அங்கு வந்திருந்த சுற்றுலா பயணிகள் மாமரத்து கடவு பரிசல் துறையில் பரிசல் சவாரி செய்து மகிழ்ந்தனர்.

### தமிழகத்தில் 6 பல்கலைக்கழகங்களில்

# ஜன.22 முதல் பிப். 5 வரை பட்டமளிப்பு விழா

புதுடெல்லி, ஜன.13

தமிழகத்தில் ஆறு பல்கலைக்கழகங்களில் ஜனவரி 22 முதல் பிப்ரவரி 5 வரை பட்டமளிப்பு விழாக்கள் நடைபெற உள்ளன.




தமிழகத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும் மாநில அரசுக்கும் இடையே எழுந்திருக்கும் ,மோதல் காரணமாக

பட்டமளிப்பு விழாக்கள் நடத்தப்படாததால், பல்கலைக் கழகங்களில் பயின்ற மாணவர்கள் பட்டம் பெற முடியவில்லை. இந்தத் தாமதத்தால், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் சேர முடியாதது உள்ளிட்ட பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக திமுக அரசுக்கும் ஆளுநர் ஆர். என்.ரவிக்கும் பல்வேறு விவகாரங்களில் முரண்பாடுகள் தொடரும் சூழலில், பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர்களை அழைத்து மாநாடு நடத்துவது உள்ளிட்ட வேலைகளில் ஆளுநர் ஈடுபட்டார்.

எனவே துணைவேந்தர் குழுக்களில் யுஜிசியின் வேட்பாளரைச் சேர்ப்பது தொடர்பாக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும் மாநில அரசுக்கும் இடையே நடந்து வரும் மோதல் காரணமாக, 22 மாநில பல்கலைக்கழகங்களில் 14 துணை வேந்தர்கள் இல்லாமல் செயல்படுகின்றன.

இதனால் மாநில பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழா ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் வரை தாமதமாகியுள்ளது.

இதற்கிடையே பட்டமளிப்பு விழாக்களை நடத்த ஆளுநரின் ஒப்புதல் அளித்துள்ளார். அந்த வகையில் , சென்னை பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகிய ஆறு மாநில பல்கலைக்கழகங்களில் ஜனவரி 22 முதல் பிப்ரவரி 5 வரை பட்டமளிப்பு விழாக்கள் நடைபெறும். என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் (2024 மற்றும் 2025) தேர்ச்சி பெற்ற ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் பட்டங்களைப் பெறுவார்கள்.

இதற்கிடையே சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா ஜனவரி 22 ஆம் தேதி செனட் ஹவுஸில் நடைபெறும், இதில் விஞ்ஞானி ஏ. சிவதாணு பிள்ளை தலைமை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற 1.8 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் தங்கள் பட்டங்களைப் பெறுவார்கள்.

முனைவர் பட்ட அறிஞர்கள், தரவரிசை பெற்றவர்கள் மற்றும் பதக்கம் வென்றவர்கள் உட்பட சுமார் 1,300 மாணவர்கள் தங்கள் பட்டங்களையும் பதக்கங்களையும் நேரில் பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

### கழுத்தை நெரித்து கொடூரம்:


# 'செக்ஸ்'சுக்கு மறுத்த 34 வயது ஐ.டி. பெண் ஊழியர் படுகொலை

## ★ தீராத ஆசையால் 18 வயது மாணவர் வெறிச்செயல்

## ★ தீவைத்து எரித்து புகை மூட்டத்தில் இறந்ததாக நாடகம்

பெங்களூர், ஜன.13

செக்ஸ்சுக்கு மறுத்த 34 வயது ஐ.டி. பெண் ஊழியர் கழுத்தை நெரித்து கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார். தீராத ஆசையால் அந்த பெண் ஊழியரை 18 வயது கல்லூரி மாணவர் கொலை செய்தது விசாரணையில் தெரியவந்தது. மேலும் படுக்கை அறையில் தீவைத்து எரித்து புகை மூட்டத்தில் சிக்கி அவர் இறந்ததாக நாடகமாடியதும் அம்பலமானது.





கர்நாடக மாநிலம் பெங்களூரில் நடந்த இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:–கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள ராமமூர்த்தி நகரில் சுப்பிரமணிய லே–அவுட் பகுதியில் சர்மிளா (வயது 34) என்ற பெண் வசித்து வந்தார். கம்ப்யூட்டர் என்ஜினீயரான இவர் அங்குள்ள ஒரு பிரபல ஐ.டி நிறுவனத்தில் பணிபுரிந்தார்.இந்நிலையில் கடந்த 3–ஆம் தேதி இரவு இவர் தங்கியிருந்த அடுக்குமாடி குடியிருப்பில் திடீரென தீப்பிடித்து எரிந்தது. உடனேதீயணைப்புபடையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர். ஆனால் இந்த விபத்தில் சர்மிளா பரிதாபமாக உயிரிழந்தார். தீ விபத்தில் ஏற்பட்ட புகை மூட்டத்தால் அவர் மூச்சுத்திணறி இறந்திருக்கலாம் என போலீசார் கருதினார்கள்.

இது குறித்து போலீசார் விசாரணை நடத்தினார்கள். மர்மமான முறையில் இறந்ததாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. பின்னர் அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டது. மேலும் பிரேத பரிசோதனை அறிக்கையும் வெளியானது. அதில் சர்மிளா கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது.

எனவே சுப்பிரமணிய லே–அவுட் குடியிருப்பில் தங்கியிருந்தவர்களிடம் போலீசார் அதிரடி விசாரணை மேற்கொண்டனர். அதில் கிருஷ்ணய்யா என்கிற கர்னல் குரை (வயது 18) என்பவர் சர்மிளாவை கொலை செய்தது தெரியவந்தது.அதைத்தொடர்ந்து அவரை போலீசார் கைது செய்தனர்.பின்னர் அவரிடம் போலீசார் நடத்திய விசாரணையில் சர்மிளாவை கொலை செய்தது ஏன் என்ற திடுக்கிடும் தகவல் வெளியானது. சர்மிளா தங்கியிருந்த அடுக்குமாடி குடியிருப்பில் கொலையாளி கிருஷ்ணய்யா எதிர்புறத்தில் உள்ள ஒரு அறையில் தங்கியுள்ளார். கேரளாவைச் சேர்ந்த இவர் பெங்களூரில் தங்கி அங்குள்ள ஒரு கல்லூரியில் பி.யூ.சி. (பிளஸ் 2) படித்து வருகிறார்.இவருக்கு சர்மிளா மீது தீராத மோகம் இருந்து வந்தது.

எனவே அவரை ஒருதலையாக காதலித்து வந்தார். சம்பவத்தன்று இரவு 10 மணியளவில் யாருக்கும் தெரியாமல் சர்மிளா வீட்டின் பால்கனிக்குச் சென்றார். இவருக்கு சர்மிளா மீது தீராத மோகம் இருந்து வந்தது. எனவே அவரை ஒருதலையாக காதலித்து வந்தார்.

சம்பவத்தன்று இரவு 10 மணியளவில் யாருக்கும் தெரியாமல் சர்மிளா வீட்டின் பால்கனிக்குச் சென்றார்.

அங்கிருந்து ஜன்னல் வழியாக அவரது படுக்கையறைக்கு பூனை போல் பதுங்கி சென்றார்.

பின்னர் சர்மிளாவுக்கு தெரியாமல் பின்புறமாகச் சென்று அவரை கட்டிப்பிடித்தார். இதை சற்றும் எதிர்பாராத சர்மிளா பயத்தில்கூச்சலிட்டார்.உடனே அவரது வாயை பொத்திய கிருஷ்ணய்யா தனது செக்ஸ் ஆசைக்கு இணங்குமாறு சர்மிளாவை கட்டாயப்படுத்தினார்.

அதற்கு சர்மிளா மறுத்தார். எனவே அவரது கழுத்தை நெரித்தும், வாயைப் பொத்தியும் மூச்சை நிறுத்தி கொடூரமாக கொலை செய்தார். பின்னர் கொலைக்கான தடயத்தை மறைத்த அவர் தீவிபத்தில் இறந்ததாக நாடகம் ஆடினார். அதற்காக சர்மிளாவின் படுக்கை அறையில் இருந்த மெத்தையை தீவைத்து எரித்தார்.இதன் மூலம் புகை மூட்டத்தில் சிக்கி மூச்சுத்திணறி அவர் இறந்ததாக நாடகத்தை அரங்கேற்றினார். இந்த தகவல்கள் கிருஷ்ணய்யாவிடம் போலீசார் நடத்திய விசாரணையில் தெரியவந்தது. இதற்கிடையே கைது செய்யப்பட்ட கிருஷ்ணய்யா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் அவரை 3 நாள்கள் போலீஸ் காவலில் எடுத்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பிரதமர் மோடி ஜன.23– ல் அந்தமான் பயணம்

## நேதாஜி பிறந்த நாள் விழாவில் பங்கேற்கிறார்

ஸ்ரீவிஜயபுரம், ஜன. 13–

நேதாஜி சுபாஷ் சந்திர போசின் 129–வது பிறந்த நாள் விழாவில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 23–ஆம் தேதி அந்தமான் வருகிறார்.



நாட்டின் சுதந்திரத்துக்காக தனி ராணுவத்தை உருவாக்கி போராடியவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். இவரது 129–வது பிறந்த நாள் ஜனவரி 23–ஆம் தேதி நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு அந்தமான் நிகோபார் தீவில் நடைபெறும் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்கிறார் என்று மத்திய அரசு அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

கடந்த 1943–ஆம் ஆண்டு டிசம்பர் 30–ஆம் தேதி அந்தமானின் ஸ்ரீவிஜயபுரத்தில் (போர்ட் பிளேர்) மூவர்ண கொடியேற்றி நேதாஜி கொண்டாடினார். அதை

நினைவுகூரும் வகையில் 23–ஆம் தேதி நேதாஜி மைதானத்தில் தேசியக் கொடி ஏற்றி பிரதமர் மோடி உரையாற்றுகிறார்.

மேலும், இங்குள்ள நேதாஜியின் உருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை

செலுத்துகிறார். மேலும், சுதந்திரப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த தியாகிகளின் நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். அத்துடன், வீர சாவர்க்கர் அடைக்கப்பட்டிருந்த அந்தமானின் கொடிய சிறையைப் பார்வையிட்டு அவருக்கு மரியாதை செலுத்துகிறார்.

பின்னர் நிகோபார் தீவின் கேம்பெல் பகுதியில் நடைபெற்று வரும் நலத் திட்டப் பணிகளை பிரதமர் மோடி பார்வையிடுகிறார்.

பிரதமர் மோடியின் அந்தமான் வருகைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நேதாஜியின் தன்னலமற்ற சேவைக்காக அவரது பிறந்த நாளை 'பரக்கிரம் திவஸ்' என்ற பெயரில் ஆண்டு தோறும் மத்திய அரசு கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.க. தலைவர்களை உயிருடன் புதைப்போம்

## திரிணாமுல் காங்கிரஸ் எம்.எல்.ஏ. பேச்சால் சர்ச்சை

கொல்கத்தா, ஜன.13

பாஜக தலைவர்களை உயிருடன் புதைப்பதாக அருணவா சென் திரிணாமுல் காங்கிரஸ் எம்எல்ஏ மிரட்டல் விடுத்த கருத்துகளின் வீடியோ வைரலாகிறது.



மேற்கு வங்க அரசியலில் வன்முறையைத் தூண்டும் வகையில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் (டிஎம்சி) எம்எல்ஏ அருணவ சென் தெரிவித்த கருத்துக்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன. கொல்கத்தா ஹவுரா மாவட்டத்தில் உள்ள பக்னான் தொகுதியைச் சேர்ந்த எம்.எல்.ஏ அருணவ சென், பொதுக் கூட்டத்தில் பாஜக தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுத்த வீடியோ தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது. சட்டமன்றத் தேர்தலையொட்டி அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வீடியோவில் கூறியுள்ளதாவது

நான் இரண்டு மாதங்களுக்குதீதி(மம்தாபானர்ஜி) சொல்வதைக் கேட்க மாட்டேன். தீதி என்னை மன்னிக்க வேண்டும். 2026 இல், நாங்கள் பாஜக தலைவர்களை அடித்து உயிருடன் புதைப்போம். இவ்வாறு அவர் கூறினார். இந்தக் கருத்துகளை பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி உட்பட பல தலைவர்கள் கடுமையாகக் கண்டித்தனர். மாநிலத்தில்குண்டர்களை ஊக்குவிப்பதாகவும், தோல்வி பயத்தில் இது போன்ற அச்சுறுத்தல்களை விடுப்பதாகவும்திரிணாமுல் அரசு மீது அவர்கள் விமர்சித்தனர்

இந்த சர்ச்சை குறித்து டிஎம்சி தலைமையோ அல்லது எம்.எல்.ஏ அருணவ சென்னோ இதுவரை எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

தேர்தலுக்கு முன்னதாக இரு கட்சிகளுக்கும் இடையே அதிகரித்து வரும் இந்த வார்த்தைப் போர், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு குறித்த கவலைகளை எழுப்புவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


### ஜம்மு காஷ்மீரில்

# அத்துமீறி பறந்த பாக். டிரோன்கள்

## இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியது; எல்லையில் உஷார் நிலை

ஸ்ரீநகர், ஜன.13–

ஜம்மு–காஷ்மீர் எல்லைக்குள் பாகிஸ்தான் டிரோன்கள் அத்துமீறி பறந்தன. அவற்றின் மீது இந்திய ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில் சில டிரோன்கள் வீழ்த்தப்பட்டன. இதையடுத்து எல்லையில் ராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.



இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே ஒருபோதும் நல்லிணக்கம் நிலவியது இல்லை. எல்லையில் தொடர்ந்து பதற்றமாகவே இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் தீவிரவாதிகளை பாகிஸ்தான் ஏவி வருவதுதான்.

இந்த தீவிரவாதிகள் அடிக்கடி இந்திய பாதுகாப்பு வீரர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தி வந்தனர்.

அவர்களுக்கு நமது பாதுகாப்பு படை வீரர்கள் கடும் பதிலடி கொடுத்தனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22–ஆம் தேதி பகல்ஹாம் என்ற இடத்தில் 26 அப்பாவி சுற்றுலா பயணிகளை தீவிரவாதிகள் மிகவும் கொடூரமாக சுட்டுக் கொன்றனர்.

இதற்கு பதிலடியாக இந்திய ராணுவம் கடும் நடவடிக்கை எடுத்தது. அதன்படி பாகிஸ்தான் மற்றும் அதன் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள 9 தீவிரவாத முகாம்களை தாக்கி அழித்தது. இவற்றில் 150–க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து இந்தியா மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. அதற்கும் இந்தியா பதிலடி கொடுத்தது. அந்த வகையில் பாகிஸ்தானின் 9 விமான தளங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. 40–க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டார்கள். 12–க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

இந்த சண்டை மே 7 முதல் 10–ஆம் தேதி வரை நடந்தது. அதன் பிறகு இந்தியா தாக்குதலை நிறுத்தியது. இருந்தாலும் போர் நடவடிக்கை அப்படியே நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்தது.

இந்த போர் நடவடிக்கைக்கு ஆபரேசன் சிந்தூர் என்ற பெயர் வைக்கப்பட்டது.

போர் நடந்த சமயத்தில் பாகிஸ்தான் ஒரே நேரத்தில் பல நூறு டிரோன்களை ஏவியது. அவற்றை இந்திய ராக்கெட்டுகள் நடுவானில் தடுத்து வீழ்த்தின.

இந்த சண்டைக்குப் பிறகு தொடர்ந்து எல்லையில் ராணுவம் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இதையடுத்து தீவிரவாத முகாம்களை வேறு பகுதிக்கு பாகிஸ்தான் ராணுவம் மாற்றியது.

அத்துடன் எல்லையில் கண்காணிப்பையும் தீவிரப்படுத்தி வருவதாக செய்தி வெளியானது.

இப்படிப்பட்ட நிலையில் நேற்று இரவில் அடுத்தடுத்து காஷ்மீர் எல்லைக்குள் பாகிஸ்தானிய டிரோன்கள் ஊடுருவி வந்தன. இதை இந்திய வீரர்கள் கண்காணித்தனர்.

இதையடுத்து பாதுகாப்பு வீரர்கள் உஷார்படுத்தப்பட்டார்கள். அந்த டிரோன்களை நோக்கி துப்பாக்கியால் சுடத் தொடங்கினர். அதில் சில டிரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதனால் காஷ்மீர் எல்லையில் ஒருவித பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

காஷ்மீருக்குள் தற்போது தீவிரவாதிகளால் நேரடியாக ஊடுருவ முடியவில்லை.

பனிப்பொழிவும் அதிகம் உள்ளது. எனவே டிரோன்கள் மூலம் ஆயுதங்களையும், போதைப் பொருட்களையும் இங்குள்ள தீவிரவாதிகளுக்கு கடத்துகின்றனர். தற்போது காஷ்மீரில் 110–க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் இருப்பதாக கூறப்படுகிறது.

# குஜராத்தில் களைகட்டிய சர்வதேபட்டம் திருவிழா

## மோடியுடன் கைகோர்த்த புதிய ஜெர்மன் வேந்தர்

குஜராத்,ஜன.13–

அகமதாபாத்: குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற சர்வதேபட்டம் விடும் விழாவை பிரதமர் மோடியும் ஜெர்மன் வேந்தரும் இணைந்து தொடங்கி வைத்தனர். இந்தியா மற்றும் ஜெர்மனி இடையிலான தூதரக உறவுகள் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, ஜெர்மன்நாட்டின்வேந்தராகப் பொறுப்பேற்றுள்ள பிரெட்ரிக் மெர்ஸ் முதன்முறையாக இந்தியாவிற்கு வருகைதந்துள்ளார். அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ஆற்றுப் படுகையில் நடைபெற்ற விழாவிற்கு வருவதற்கு முன்பாக, இரு தலைவர்களும் சபர்மதி



ஆசிரமத்திற்குச் சென்று மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.பின்னர் இருவரும் காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திரில் சந்தித்தபோது, நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டுவது மற்றும் விசா நடைமுறைகளை எளிதாக்குவது உள்ளிட்ட வர்த்தக ரீதியிலான பேச்சுவார்த்தைகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சபர்மதி ஆற்றுப் படுகையில் 2026ம் ஆண்டுக்கான சர்வதேபட்டம் விடும் விழாவை பிரதமர் மோடியும், ஜெர்மன் வேந்தர் பிரெட்ரிக் மெர்ஸும் கோலாகலமாகத் தொடங்கி வைத்தனர்.இவ்விழாவில் 50 நாடுகளைச் சேர்ந்த 135 சர்வதேபட்டம் விடும் கலைஞர்கள் மற்றும் நூற்றுக் கணக்கான உள்ளூர் கலைஞர்கள் கலந்துகொண்டு பல வண்ண பட்டங்களை வானில் பறக்கவிட்டனர். விழாவின் ஒரு பகுதியாக இரு தலைவர்களும் இணைந்து உற்சாகமாகப் பட்டங்களை பறக்கவிட்டு மகிழ்ந்தனர். 14ம் தேதி வரை நடைபெறவுள்ள இந்தத் திருவிழா, மகர சங்கராந்தி கொண்டாட்டங்களின் தொடக்கமாக அமைந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# டிரம்ப் தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு பதிலடி

## ஈரான் கடும் எச்சரிக்கை



துபாய்,ஜன. 13

ஈரானில் பணவீக்கம் அதிகரித்து மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்ததால் ஆத்திரமடைந்துள்ள மக்கள், கடந்த மாதம் 28ம் தேதி போராட்டங்கள் தொடங்கின. இது அரசுக்கு எதிரான போராட்டமாக மாறியுள்ளது.

தலைநகர் தெஹ்ரான், நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மாஷாத் உள்பட நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

1979ம் ஆண்டு நாட்டில் இஸ்லாமிய புரட்சி நடைபெற்றது முதல், மதகுருக்கள் ஆட்சி செய்து வரும் மரபை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற குரல்களும் அங்கு வலுக்க தொடங்கியுள்ளன.

இந்த போராட்டங்களின் போது பாதுகாப்பு படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையேநடந்தமோதல்களில் பலியானோர் எண்ணிக்கை 116 ஆக அதிகரித்துள்ளது. 2,600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈரானில் அரசுக்கு எதிராக போராடும் போராட்டக்காரர்களுக்கு உதவத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான்விவகாரத்தில்தலையிடுவது குறித்து அதிபர் டிரம்ப் மிரட்டல் விடுத்த நிலையில் ஈரான் நாடாளுமன்ற கூட்டம் நேற்று நடந்தது.

இந்த கூட்டம் குறித்த செய்தியை ஈரான்தொலைக்காட்சி ஒளிபரப்பியது. கூட்டத்தின் போது அந்த நாட்டு எம்பிக்கள் அமெரிக்காவுக்கு மரணம் என்று கூச்சலிட்டனர்.

நாடாளுமன்ற சபாநாயகர் காலிபாப் பேசும் போது, போராட்டங்களில் கலந்து கொள்ளும் போராட்டக்காரர்கள் மீது உறுதியான நடவடிக்கை எடுத்து வரும் பாதுகாப்பு படையினருக்கு பாராட்டு தெரிவிப்பதாக கூறினார்.

மேலும் அமெரிக்கா இஸ்லாமிய குடியரசைத் தாக்கினால், அமெரிக்க ராணுவமும் இஸ்ரேலும் ''சட்டபூர்வமான இலக்குகளாக'' இருக்கும் என்று எச்சரித்தார்.

இதனிடையே, நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை அமெரிக்க அரசு அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெளியிட்டுள்ள செய்தியில், ஈரான்மீதானராணுவ தாக்குதல் நடத்துவது குறித்து அதிபர் டிரம்ப் இன்னமும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளன.

## போராட்டம் வன்முறையாக வெடித்ததால்

# ஈரானில் 48 மணி நேரத்தில் 2,000 பேர் பலி

## துருக்கி, கத்தார் விமான போக்குவரத்து நிறுத்தம்



தெஹ்ரான்,ஜன. 13

ஈரானில் இணைய சேவை துண்டிக்கப்பட்டு நடைபெற்று வரும் கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர்பலியாகியுள்ளநிலையில்அமெரிக்காதலையிட நேரிடும் என எச்சரித்துள்ளது.

ஈரானில்கடந்த இரண்டு வாரங்களாக அரசுக்கு எதிராகத் தொடங்கிய போராட்டம் தற்போது பெரும் கலவரமாக உருவெடுத்துள்ளது.

போராட்டக்காரர்கள் ஒன்றிணைவதைத் தடுக்கும் வகையிலும், அங்கு நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள் வெளி உலகிற்குத் தெரியாமல் இருக்கும் வகையிலும் கடந்த 8ம் தேதி முதல் நாடு முழுவதும் இணையதளம் மற்றும் தொலைபேசி சேவைகள் முடக்கப்பட்டுள்ளன.

ஈரானின் வரலாற்றிலேயே மிக மோசமான இணையத் தடையாகவும், தகவல் தொடர்பற்ற நிலையாகவும் கருதப்படுகிறது. போராட்டத்தில் ஈடுபடுவோர் மீது, 'வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலின் பேரில் செயல்படும் நாசகாரர்கள் மற்றும் தீவிரவாதிகள்' என்று ஈரான் அரசு குற்றம் சாட்டியுள்ளதுடன், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

இந்நிலையில் ராணுவம் மற்றும் பாதுகாப்புப் படையினர்நடத்தியதுப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.

கடந்த 8ம் தேதி மற்றும் 10ம் தேதிக்கு இடைப்பட்ட 48 மணி நேரத்தில் மட்டும் சுமார் 2,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலைநகர் தெஹ்ரான் மற்றும் ராஷ்ட் உள்ளிட்ட நகரங்களில் உள்ள மருத்துவமனைகள் குண்டடிபட்ட உடல்களால் நிரம்பி வழிகின்றன.

இதற்கிடையே, 'அமைதியான முறையில் போராடும் மக்களைக் கொல்வதை ஈரான் அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும்;

இல்லையெனில் அமெரிக்கா தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயங்காது' என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

இந்தப் பதற்றமான சூழல் காரணமாக துருக்கி மற்றும் கத்தார் உள்ளிட்ட நாடுகளின் விமான நிறுவனங்கள் ஈரானுக்கான விமான சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன.

# 2 வீரர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடி

## சிரியாவில் அமெரிக்கா மீண்டும் தாக்குதல்



வாஷிங்டன்,ஜன. 13

சிரியாவில் 2 வீரர்கள் கொல்லப்பட்டதற்கு பழிவாங்க ஐஎஸ் தீவிரவாத தளங்களின் மீது அமெரிக்கா மீண்டும் வான்வழி தாக்குதலை நடத்தியது.

கடந்த டிசம்பர் மாதம் 19ம் தேதி சிரியாவின், பால்மைராவில் ஐஎஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள்2 பேர் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக டிச.20ம் தேதி மத்திய சிரியாவில் ஐஎஸ் தீவிரவாத தளங்களை குறிவைத்து 70க்கும் மேற்பட்ட இடங்களில் அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில் ஐஎஸ் தீவிரவாத தளங்களை குறிவைத்து இரண்டாவது முறையாக நேற்று அமெரிக்கா வான் வழி தாக்குதலை நடத்தியது.

அமெரிக்க ராணுவம் வெளியிட்டுள்ள தகவலின்படி, 35 இடங்களைக் குறிவைத்து 90க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மற்றும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

மொத்தம் 20 விமானங்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டன.


இதில், தீவிரவாத மையங்கள்தரைமட்டமாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல்களில் எத்தனைபேர்கொல்லப்பட்டனர் என்ற விவரங்களை அமெரிக்க ராணுவம் வெளியிடவில்லை.

## அமெரிக்க பெண் கொல்லப்பட்ட விவகாரம்

# 'குற்றவாளிகளை நேசிக்கிறேன் போலீசைவெறுக்கிறேன்'

## ஸ்வீடன் பாப் பாடகி சர்ச்சைபேச்சு



ஸ்டாக்ஹோம்,ஜன. 13

'குற்றவாளிகளை நான் நேசிக்கிறேன், போலீசாரை வெறுக்கிறேன்' என்று ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த பிரபல பாடகி சமூக வலைதளத்தில் வெளியிட்ட கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணத்தில் குடியேற்றத் துறை அதிகாரி சுட்டதில் ரெனி நிக்கோல் குட் என்ற பெண் உயிரிழந்த சம்பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த பிரபல பாப் பாடகி ஜாரா லார்சன், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தொடர்ச்சியாக கருத்துக்களைப் பதிவிட்டார். அதில், 'நான் அகதிகள், திருநங்கைகள் மற்றும் குற்றவாளிகளை நேசிக் கிறேன். அதேசமயம் அமெரிக்க குடியேற்ற மற்றும் சுங்க அமலாக்கத்துறை அதிகாரிகளை (ஐசிஇ) வெறுக்கிறேன்' என்று காரசாரமாகக் குறிப்பிட்டிருந்தார். மேலும், 'பலாத்காரம், கருக்கலைப்பு, சோசலிசம் போன்றவற்றை ஆதரிக்கிறேன்' என்றும் அவர் பட்டியலிட்டது ரசிகர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. குற்றவாளிகளை ஆதரிப்பதாகக் கூறியதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில், அதற்கு ஜாராலார்சன்பின்னர்விளக்கம் அளித்துள்ளார். 'வன்முறையற்ற போதைப்பொருள் வழக்குகளில் சிக்கும் அப்பாவிகளையே நான் குற்றவாளிகள் எனக் குறிப்பிட்டேன். கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களை சட்டப்பூர்வமாக்க வேண்டும். எனது காதலன் கூட ஆறு ஆண்டுகளுக்கு முன்பு கஞ்சா வழக்கில் சிக்கியதால் அமெரிக்கா வர முடியவில்லை. உண்மையான குற்றவாளிகள் அதிகாரிகள்தான். கொலை மற்றும் ஆள் கடத்தலில் ஈடு படும் அதிகாரிகளை விட, போதைப்பொருள் பயன் படுத்து பவர்கள் எவ்வளவோ மேல்' என்று அவர் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளார்.

# 11 ஆண்டுகால திருமண பந்தம் முறிந்தது

## கள்ளக்காதல் உறவால் 'யூடியூப்' ஜோடி பிரிவு

வாஷிங்டன்,ஜன. 13

பிரபல இணைய ஜோடி விவாகரத்து கோரிய நிலையில், மனைவியை ஏமாற்றியதை ஒப்புக்கொண்டு கணவர் சமூக வலைதளத்தில் உருக்கமாகப் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்காவில் 'தி ஸ்காட்ஸ்' என்ற பெயரில் யூடியூப் போன்ற சமூக வலைதளங்களில் மிகவும் பிரபலமாக வலம் வந்த டெஸ்மண்ட் ஸ்காட் மற்றும் கிறிஸ்டி சாரா ஸ்காட் ஜோடி, தங்களது 14 வயதிலிருந்தே காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

கடந்த 11 ஆண்டுகளாகத் திருமண பந்தத்தில் இணைந்திருந்தனர்.

இவர்களுக்கு வான்ஸ் மற்றும் வெஸ்டின் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர்.

மிகச் சிறந்த தம்பதிகளாகக் கொண்டாடப்பட்ட நிலையில், அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் ஹாரிஸ் கவுண்டி நீதிமன்றத்தில் கிறிஸ்டி சாரா விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் தனது கணவரின் கள்ளக்காதல் உறவே பிரிவுக்குக் காரணம் என்றும், இனிமேல் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்றும் குறிப்பிட்டிருந்தது ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், நேற்று டெஸ்மண்ட் ஸ்காட் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், 'கடந்த 2025ம் ஆண்டு இறுதியில் நாங்கள் பிரிய நினைத்தோம். அப்போது நான் செய்த சில தவறுகளுக்காக இப்போது வருந்துகிறேன்.

விவாகரத்து முடிவை எடுப்பதற்கு முன்பே இதுபற்றி கிறிஸ்டியிடம் கூறிவிட்டேன்' என்று மறைமுகமாகத் தனது தவறான நடத்தையை ஒப்புக்கொண்டுள்ளார். குழந்தைகள் நலனில் இருவரும் தொடர்ந்து அக்கறை காட்டுவதாகவும், சமையல் தொடர்பான தனது பயணத்தைத் தொடரப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜெர்மனி பிரதமர் இந்தியா வருகை

## அகமதாபாதில் பிரதமர் மோடியுடன் பேச்சு



புதுடெல்லி,ஜன. 13

ஜெர்மனி பிரதமர்ஃப்ரீட்ரிக் மொ்ஸ், இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு திங்கள்கிழமை வரவுள்ளர்.

குஜராத் மாநிலம், அகமதாபாதில்பிரதமர்நரேந்திர மோடியுடன் அவர்இருதரப்பு பேச்சுவர்த்தையில் ஈடுபடவுள்ளர்.

உலகளாவிய புவி-அரசியல் பதற்றத்துக்கு மத்தியில் இந்திய-ஜெர்மனி தலைவர்களின் சந்திப்பு கவனம் பெற்றுள்ளது.

ஜெர்மனி பிரதமராக ஃப்ரீட்ரிக்மேற்கொள்ளும் முதல் ஆசிய மற்றும் இந்திய பயணம் இதுவாகும்.

இரு பிரதமர்களின் சந்திப்பில் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, முக்கிய தொழில்நுட்பங்கள்உள்ளிட்ட துறைகளில் நல்லுறவை மேம்படுத்துவது மட்டுமன்றி பிராந்திய மற்றும் சர்வதேசவிவகாரங்கள்குறித்தும் ஆலோசிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனா்.

உக்ரைனில் அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகள் குறித்தும் இருவரும் ஆலோசிக்கக் கூடும் எனத் தெரிகிறது.இந்தப் பயணத்தின் முதல்கட்டமாக, சபர்மதி ஆசிரமத்தை பிரதமர்மோடியுடன் ஜெர்மனி பிரதமர்மொ்ஸ் பர்வையிட உள்ளர். பின்னா், இருவரும் சர்வதேசகாற்றாடி திருவிழா மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவிருக்கின்றனா். இதைத் தொடர்ந்து இருதரப்பு பேச்சுவர்த்தை நடைபெறவுள்ளது.

இந்தியப் பொருள்கள் மீது அமெரிக்கா 50 சதவீத இறக்குமதி விதித்துள்ள சூழலில், ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை இந்தியா வலுப்படுத்தி வருகிறது. எனவே, மோடி-மொ்ஸ் பேச்சுவர்த்தையில் வர்த்தகம் மற்றும் முதலீடு விவகாரங்கள் முக்கிய இடம் பெறும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அகமதாபாத்தில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட பிறகு ஜெர்மனி பிரதமர்பெங்களூருக்கு செல்லவுள்ளர். இந்தியாவின் முக்கிய கூட்டாளி: ஐரோப்பாவில் இந்தியாவின் மிக முக்கிய கூட்டாளியாக ஜெர்மனி விளங்குகிறது. ஐரோப்பிய ஒன்றியத்ண்தில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக நாடும் ஜெர்மனிதான். கடந்த 2024-25-இல் இருதரப்பு வர்த்தக மதிப்பு 51.23 பில்லியன் டாலரை எட்டியது. முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் இது 12.5 சதவீத உயர்வாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கு வர்த்தகம் ஜெர்மனியுடன் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஒன்றியத்தில் செல்வாக்குமிக்க நாடான ஜெர்மனி, இந்தியாவில் அதிக அந்நிய நேரடி முதலீடு செய்யும் நாடுகளில் 9-ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த 25 ஆண்டுகளில் 15.40 பில்லியன் டாலர்அந்நிய முதலீடு கிடைக்கப் பெற்றுள்ளது.

தற்போது 2,000-க்கும் மேற்பட்ட ஜெர்மனி நிறுவனங்கள் இந்தியாவில் செயல்படுகின்றன.

நீ⁰மூழ்கி ஒப்பந்தம் கையொப்பம் ?: இந்தியா-ஜெர்மனி இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு அதிகரித்துவரும் நிலையில், அந்நாட்டிடம் இருந்து இந்திய கடற்படைக்கு ஸ்டெல்த் ரக 6 நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொள்முதல் செய்வதற்கான அரசுத் தரப்பு ஒப்பந்தம் இரு பிரதமர்கள் சந்திப்பில் கையெழுத்தாகும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

கல்வி, எரிசக்தி, திறன் மேம்பாடு, மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. இந்தியா-ஜெர்மனி இடையே வியூக கூட்டாண்மை நிறுவப்பட்டு, கடந்த ஆண்டுடன் 25 ஆண்டுகள் நிறைவடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.விரைவில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்: ஜெர்மனி பிரதமர்மொ்ஸின் பயணத்தைத் தொடர்ந்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்நிலை தலைவர்கள் பலர்இந்தியாவுக்கு அடுத்தடுத்து பயணம்ற்கொள்ளவிருக்கின்றனா்.

பிரான்ஸ் அதிபர்இமானுவல் மேக்ரான், அடுத்த மாதம் இந்தியா வரவுள்ளர். இப்பயணங்களின் பலனாக, இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மனைவி மெலிண்டாவுக்கு ஜீவனாம்சமாக ரூ.71,100 கோடி வழங்கினார் பில்கேட்ஸ்



புதுடெல்லி,ஜன. 13

மைக்ரோசாஃப்ட் உரிமையாளரான பில்கேட்ஸ் தனது மனைவி மெலிண்டாவுக்கு ஜீவனாம்சமாக ரூ.71,100 கோடி வழங்கினார். உலக கோடீஸ்வரர்கள் வரிசையில் முதல் ஐந்து இடங்களில் இருப்பவராக நம்பப்படும் மைக்ரோசாஃப்ட் இணை நிறுவனர் பில்கேட்ஸும் அவரது மனைவி மெலிண்டா கேட்ஸும் பரஸ்பரம் விவகாரத்து செய்ய முடிவு செய்துள்ளனர். இது தொடர்பான அறிவிப்பை அந்த தம்பதி இணைந்து ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டனர். எங்களுடைய உறவை எப்படி கொண்டு செல்வது என மிக அதிகமாக யோசித்த பிறகு, எங்களுடைய இல்லற வாழ்வை முடித்துக் கொள்ள முடிவு செய்துள்ளோம் என்று பில் கேட்ஸ், மெலிண்டா தம்பதி கூறினர்.

இந்த கோடீஸ்வர தம்பதிக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் இணைந்து நடத்தி வரும் பில் அண்ட் மெலிண்டா ஃபவுண்டேஷன், உலக அளவில் மிகவும் கொடிய நோய்களுக்கு சிகிச்தைர உதவும் திட்டங்களுக்கும் தடுப்பூசி திட்டங்களுக்கும் நிதியுதவி செய்து அறப்பணிகளை செய்து வருகிறது. இந்த நிலையில், 2021ல் ஒப்புக்கொண்ட விவாகரத்து ஒப்பந்தப்படி 1,12,800 கோடி ஜீவனாம்சம் வழங்க பில்கேட்

ஸ் ஒப்புக்கொண்டிருந்தார். ஏற்கனவே 41,700 கோடியை மெலிண்டாவுக்கு பில்கேட்ஸ் வழங்கிய நிலையில். இறுதியாக தற்போது ரூ.71,100 கோடி வழங்கினார்.

தமக்கு கிடைத்த ஜீவனாம்சத் தொகையின் பெரும்பகுதியை பிவொட்டல் பிலாந்தொபீஸ் அறக்கட்டளைக்கு வழங்கினார். பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்துக்கு தமது அறக்கட்டளை பாடுபடுவதாக மெலிண்டா அறிவித்துள்ளார்.

# சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 உயர்ந்து ரூ.1,03,200க்கு விற்பனை



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ100 உயர்ந்து , ஒரு கிராம் ரூ.12,900 க்கு விற்பனைண்யாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,03,200க்கு விற்பனையாகிறது. சென்னையில் வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.7 உயர்ந்து ரூ.275 க்கு விற்பனை செய்யப்படுகிண்றது.

# பெட்ரோல் விலை ரூ.100.80, டீசல் விலை ரூ.92.39க்கு விற்பனை




சென்னை: பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை சென்னையில் லிட்டருக்கு ரூ.100.80 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.92.39 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயுவின் விலை லிட்டருக்கு ரூ.90.50ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

# உடலுக்கு வலு சேர்க்கும் பனங்கிழங்கு



பனைமரத்தில் இருந்து கிடைக்கும் நுங்கு மூன்று விதைகளை கொண்டிருக்கும். இளசாக இருக்கையில் அதைச் சாப்பிட மிகவும் ருசியாக இருக்கும்.

ஆனால் முற்றிப் போனால் சாப்பிட முடியாது. இந்த முற்றிய நுங்கினை மண்ணில் புதைத்துவிட சில நாட்களில் அது முளைவிட்டு பனை செடியாக வளர ஆரம்பித்து விடும். அப்படி முளைவிட்ட உடனே புதைத்த இடத்தில் தோண்டிப் பார்த்தால், நீண்ட குச்சி போல காணப்படுவதுதான் பனங்கிழங்கு. அதை வேரோடு பிடுங்கி வந்து, வேகவைத்து சாப்பிடலாம். பனங்கிழங்கின் முனை கூராகவும், அடி பருத்து கூம்பு வடிவிலும் காணப்படும்.

பனங்கிழங்கில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. இவை குளிர்ச்சி தன்மை உடையது. மலச்சிக்கலை தீர்க்கக்கூடியது. உடலுக்கு வலு சேர்க்கும். பனங்கிழங்கை வேக வைத்து சிறு, சிறு துண்டாக நறுக்கி காயவைத்து அதனுடன் கருப்பட்டி சேர்த்து இடித்து மாவாக்கி சாப்பிட்டால், உடலுக்கு தேவையான இரும்பு சத்து கிடைக்கும்.பனங்கிழங்குடன் தேங்காய்ப்பால் சேர்த்து சாப்பிட்டால், உடல் உறுப்புகள் பலம் பெறும். பெண்களின் கர்ப்பப்பை பலம் அடையும்.

பனங்கிழங்கு வாயுதொல்லை உடையது. எனவே இதை தவிர்க்க பனங்கிழங்குடன் பூண்டு, மிளகு, உப்பு சேர்த்து இடித்து மாவாக்கி சாப்பிடலாம். இனிப்பு தேவைப்படுகிறவர்கள் கருப்பட்டி சேர்த்து இடித்து சாப்பிடலாம். பனங்கிழங்கில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், இதை உண்பதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

பூமியில் இருந்து பனங்கிழங்கை பிரித்தெடுக்கும் போது, விதையில் இருந்து தவின் கிடைக்கும்.

தவின் சாப்பிட்டால் வயிற்றுவலி, ஒற்றை தலைவலி உள்ளிட்ட நோய்கள் குணமாகும். வயிறு மற்றும் சிறுநீர் பாதிப்பு பிரச்னை உள்ளவர்கள், பனங்கிழங்கு மாவை உணவில் சேர்த்து வந்தால், நல்ல பலன் கிடைக்கும்.

பனங்கிழங்கை அரைத்து மாவாக்கி அதில் கஞ்சி அல்லது கூழ் செய்து காலையில் சாப்பிட்டு வந்தால், பசி நீங்குவதுடன் உடலில் நோயெதிர்ப்பு சக்தி அதிகமாகும். பனங்கிழங்கில் பித்தம் கொஞ்சம் அதிகமாகவே உள்ளது. எனவே இதைச்சாப்பிட்டப்பின் மிளகு ஐந்து எடுத்து வாயில் போட்டு மென்று விட வேண்டும்.

மற்றபடி பனங்கிழங்கு சாப்பிடுவதால் உடலுக்கு வலு கிடைப்பதுடன், ஆரோக்கியம் உண்டாகும். பனங்கிழங்கை சிறிது மஞ்சளுடன் சேர்த்து வேகவைத்து, பின்னர் கிழங்கை வெயிலில் காய வைத்து, அதை, மாவாக்கி, கருப்பட்டியுடன் சேர்த்து சாப்பிட, உடலுக்கு வலு கிடைப்பதுடன் ஆரோக்கியமும் அதிகரிக்கும்.

பனங்கிழங்கில் இரும்புச் சத்து அதிகமாக உள்ளது. இதில் நார்ச்சத்தும் அதிகம் இருப்பதால் மலச்சிக்கல் ஏற்படுவதைக் குணமாக்கும்.அவித்த பனங்கிழங்கை வெயிலில் உலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டு தேவைப்படும் போது உண்ணலாம். இது நீண்ட நாட்கள் கெட்டுப் போகாமல் இருக்கக் கூடியதாகும்.

பனங்கிழங்கை அவித்து காய வைத்து பொடித்து, அதில் சர்க்கரை மற்றும் தேங்காய் சேர்த்து சாப்பிட, மிகவும் சுவையாக இருக்கும்.

இந்தக் கிழங்கை அவித்து, வெங்காயம், பச்சைமிளகாய் சேர்த்து அரைத்து துவையலாகவும் உண்ணலாம்.பனங்கிழங்கு குளிர்ச்சியைத் தரவல்லது. மேலும் குளிர் காலத்தில் உடல் வெப்பத்தை சீராக வைத்திருக்க உதவும் கிழங்கு இது. வயிற்றில் உள்ள பூச்சிகளை அழிக்கும் ஆற்றலும் பனங்கிழங்கில் உள்ளது.

# மினி இட்லி கோபி கிரேவி

தேவையான பொருட்கள்



1மீடியம் சைஸ் காலிஃப்ளவர்
2மீடியம் சைஸ் பெரிய வெங்காயம்
2 தக்காளி,2பச்மைிளகாய்.1இன்ச் இஞ்சி
10 பூண்டு பற்கள்
2 ஸ்பூன் வரை கொத்து மல்லித் தூள்
1ஸ்பூன் வரமிளகாய் தூள்
1/4ஸ்பூன் மஞ்சள் தூள்
1/4 ஸ்பூன் கரம் மசாலாத்தூள்
1இன்ச் பட்டை,3கிராம்பு,1ஏலக்காய்
1ஸ்பூன் சோம்பு,கசகசா
2 டேபிள் ஸ்பூன் தேங்காய்த்துருவல
1டேபிள் ஸ்பூன் எண்ணெய்
3/4ஸ்பூன் கடுகு
கருவேப்பிலை, கொத்தமல்லி 2 ஸ்பூன் நெய்
2 கப் இட்லி மாவு,

செய்முறை

தேவையான அனைத்து பொருட்களையும் தேவையான அளவு எடுத்துக் கொள்ளவும். காலிபிளவரை சிறு சிறு பூக்களாக பிரித்து எடுத்து, உப்பு சேர்த்து சுடுதண்ணீரில் கலந்து அலசி எடுத்துக்கொள்ளவும்.2 மீடியம் சைஸ் பெரிய வெங்காயத்தை அரிந்து கொள்ளவும். அதேபோல் 2 தக்காளியை அரிந்து கொள்ளவும்.. பூண்டு தோலுரித்துக் கொள்ளவும். கசகசாவை லேசாக சூடு செய்து கொள்ளவும். மிளகாயை பொடியாக அரிந்து கொள்ளவும். ஒரு வாணலியில் ஒரு டேபிள்ஸ்பூன் எண்ணெய் சேர்த்து சூடு ஆன பிறகு கடுகு சேர்த்து பொரியவிடவும். 2 பச்மைிளகாயை வாணலியில் சேர்த்து லேசாக வதக்கி கொள்ளவும். இது செய்வதற்கு முன்பு வெங்காயத்தை உரித்த பூண்டு மற்றும் பொடியாக அரிந்த இஞ்சியை சேர்த்து மிக்ஸியில் நைஸாக அரைத்துக் கொள்ளவும் அதேபோல தக்காளியை விழுதாக அரைத்துக் கொள்ளவும்.பச்மைிளகாய் சேர்த்து வதக்கியவுடன் வெங்காயத்தை சேர்த மூன்று நிமிடம் வதக்கவும். பிறகு தக்காளி விழுதை சேர்த்து வதக்கிக் கொள்ளவும். ஆயில் லேசாக பிரிந்து வரும் வரை வதக்கவும்.இப்போது இதில் மஞ்சள்தூள் வரமிளகாய்த்தூள் உப்பு மற்றும் வர கொத்தமல்லி தூள் சேர்த்து நன்கு கலந்து விட்டு பச்வைாசம் போகும் வரை கிளறி விடவும். பிறகு சுத்தம் செய்த காலிஃப்ளவரை சேர்த்து நன்கு வதக்கிக் கொள்ளவும்.இதற்கிடையில் மிக்ஸியில் தேங்காய் துருவல் மற்றும் கசகசா, சோம்பு, பட்டை, லவங்கம், ஏலக்காய் அனைத்தையும் சேர்த்து நைசாக அரைத்துக் கொள்ளவும். காய் நன்கு வதங்கியவுடன் தண்ணீர் சேர்த்து குக்கரில் வேக விடவும். காய் முக்கால் பதத்திற்கு வந்தவுடன் அரைத்து வைத்த தேங்காய் விழுதை சேர்த்து கலந்துவிட்டு 5 நிமிடம் மூடி வைத்து வேகவிடவும். காய் முழுக்க நன்கு வெந்துவிடும்.பிறகு கரம் மசாலா தூள் சேர்த்து நன்கு கலந்து விட்டு ஒரு கொதி விடவும்..பொடியாக அரிந்து வைத்த கொத்தமல்லி மற்றும் கருவேப்பிலை சேர்த்து ரெடி செய்து கொள்ளவும்.இப்போது இட்லி மாவை ஒரு டீஸ்பூன் அளவு உள்ள மெசர்மெண்ட் ஸ்கூப்பில் எடுத்து, தயாராக எண்ணெய் தடவி வைத்த மினி இட்லி தட்டில் ஊற்றவும். இட்லி பானையில் தண்ணீர் சேர்த்து கொதித்த உடன் இட்லி தட்டுகளை அடுக்கி ஏழு அல்லது எட்டு நிமிடம் வரை போட்டு வேகவிடவும்.ஒரு நிமிடம் ஆறவிட்டு ஸ்பூனில் தண்ணீர் நனைத்து மெதுவாக இட்லியை உடையாமல் எடுக்கவும். கொஞ்சம் நெய், பொடியாக அரிந்த கொத்தமல்லித்தழை, கால் வெங்காயம் பொடியாக அரிந்தது எடுத்து வைத்துக் கொள்ளவும்.பவுலில் சிறிது காலிபிளவர் கிரேவி சேர்த்து அதன் மேல் இட்லியை அடுக்கவும். அதன்மேல் நெய் சிறிது சேர்த்துக் கொள்ளவும். பிறகு காலிபிளவர் உடன் கிரேவியை அதன்மேல் ஊற்றி வெங்காயம் கொத்தமல்லி சேர்த்து அலங்கரித்து ஸ்பூன் வைத்து பரிமாறவும். சுவையான மினி இட்லி கோபி கிரேவி தயார்.

# இளம் வயது முடக்கு வாதம் தீர்வு என்ன

‘எனக்கு வயசு 30 தான்ய ஆனால், மூட்டு வலி தாங்க முடியலை’ என்று புலம்பும் இளம் வயதினர்களே அதிகமாக காணப்படுகின்றனர். முடக்குவாதம் என்றாலே முதியவர்களுக்கு மட்டும் வரும் நோய் என்ற பொதுவான எண்ணம் இன்றைய காலத்தில் மாறிவருகிறது. முந்தைய தலைமுறை மக்கள் உடல்ரீதியாக சுறுசுறுப்பாக வாழ்ந்து வந்ததால் அவர்களுக்கு மூட்டு மற்றும் எலும்பு தொடர்பான பிரச்னைகள் பெரும்பாலும் 50 வயதிற்குப் பிறகே தோன்றின.

ஆனால், இன்றைய இளம் தலைமுறை தற்போது பின்பற்றும் வாழ்வியல் முறையின் காரணமாக பல்வேறு நோய்களை இளம் வயதிலேயே எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு முதல் மற்றும் முக்கிய காரணமாக அமைவது நீண்ட நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருக்கும் வாழ்வியல் அதாவது sedentary lifestyle என சொல்லப்படும் முறையே காரணமாக அமைகிறது.இந்த வாழ்வியலின் விளைவாக இப்பொழுதெல்லாம் 20,30 வயதிலேயே உடல் பருமன் அதிகரிப்பு, மூட்டு வலி, முதுகு வலி, தசைஇறுக்கம், காலை எழுந்தவுடன் தபைிடிப்பு போன்ற பல்வேறு பிரச்னைகளை சந்திக்க நேர்கிறது.

இவையெல்லாம் ஒரே இரவில் வருவதல்ல. இவை நாளடைவில் அமைதியாக நம் வாழ்க்கைக்குள் நுழைகின்றன. வெளியில் ஆரோக்கியமாக தோன்றும் பல இளைஞர்கள் உள்ளே வலியோடு வாழ்கிறார்கள்.

இந்த நிலைக்கு வயது காரணம் அல்ல. வாழ்க்கை முறைதான் காரணம். அதிலும் இளைஞர்களுக்கு அதிக சிரமம் தருவது தொடர்ந்திருக்கும்மூட்டு வலிதான். ஏனெனில் அது நேரடியாக வாழ்க்கைத் தரத்தை பாதிக்கிறது.



முடக்கு வாதம் என்றால் என்ன?

எளிமையான வார்த்தைகளில் சொன்னால், நம் உடலில் தொடையிலிருந்து வரும் எலும்பும் காலில் இருந்து வரும் எலும்பும் இணையும் இடமே முழங்கால் மூட்டு

என்பர். மூட்டுகளுக்குள் இருக்கும் மென்மையான திசுக்கள் மெதுவாக தேய்ந்து போவதாலும், அதனைச் சுற்றியுள்ள தசைகள் பலவீனமாகவோ இறுக்கமாகவோ மாறுவதாலும் ஏற்படும் வலி மற்றும் இயக்கக் குறைபாடுகளையே முடக்கு வாதம் (Osteoarthritis) என்று கூறுகிறோம். இது ஒரே நாளில் வரும்

நோய் அல்ல; காலப்போக்கில் உருவாகும்பிரச்னைஎன்பதைபுரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.

இளம் வயதில் வந்தால் இது ஆபத்தா?

★ஆபத்து இல்லைய

★ஆனால் அலட்சியம் ஆபத்தானது!

★ஆரம்ப நிலையில் கண்டறிந்தால் முடக்கு வாதம் அதிகமாவதை கட்டுப்படுத்தலாம். சரியான உடற்பயிற்சி மற்றும் வாழ்வியல் மாற்றங்களின் மூலம் வலி வராமல் தடுக்கலாம். அலட்சியமாக இருந்து விட்டால் 40, 45 வயதிலேயே இன்னும் வேகமாக முடக்கு வாதம் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

இதற்கான காரணங்கள் என்ன?

★ இளம் வயதினருக்கு வரும் மூட்டு வலி நேரடியாக வாழ்வியலோடு தொடர்புடையது.

★ இளம் வயதில் உடல் எடை அதிகரிப்பு,

★ நீண்ட நேரம் உட்கார்ந்து வேலை பார்ப்பது,

★ தவறான முறையில் உட்காருவது மற்றும் நிற்கும் பழக்கங்கள் (posture),

★ பழைய காயங்களுக்கு சிகிச்சைஅளிக்காமல் இருப்பது,

★ விட்டமின் டி குறைபாடு,

★ உடற்பயிற்சி செய்யாமல் இருத்தல் போன்ற காரணங்களால் இளைஞர்களுக்கு மூட்டு வலி வருகிறது.

ஊட்டச்சத்து குறைபாடினால் முடக்கு வாதம் வருமா?

முடக்கு வாதம் வருவதற்கு போஷாக்கு குறைபாடு ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. ஜங் உணவுகள் மற்றும் சத்துக்கள் குறைந்த உணவுகளை அதிகமாக எடுத்துக் கொள்வதினால் கால்சியம், விட்டமின் டி போன்ற அத்தியாவசியமான சத்துக்கள் குறைகிறது. புரோட்டின் சத்து தசைகளை வலுப்படுத்துவதற்கும், கால்சியம் மற்றும் விட்டமின் டி சத்து எலும்புகளை வலுப்படுத்த உதவுகிறது.

நாம் அன்றாடம் உண்ணும் உணவுகளில் இந்த சத்துள்ள உணவுகளை குறைவாக எடுத்துக்கொண்டால் அது நேரடியாகவே எலும்புகளையும் தசைகளையும் வலு இழக்க செய்யலாம்.

எனவே நாம் உண்ணும் உணவில் புரோட்டின் விட்டமின் கால்சியம் போன்ற சத்துக்கள் நிறைந்த உணவுகளை உண்பதே நன்று.

இதன் ஆரம்ப கால அறிகுறிகள்

காலையில் எழுந்தவுடன் மூட்டு வலி

மூட்டுகளை மடக்கி நீட்டும்போது கிளிக் அல்லது உராய்வு (கடக் கட) சத்தம் வருவது.நீண்ட நேரம் உட்கார்ந்த பின் எழும்போது வலி ஏற்படுதல்

முழங்கால் மடக்குவதில் மாடிப்படி ஏறி இறங்கும் போது சிரமம் உண்டாதல்.

காலை நேரத்தில் மூட்டு மற்றும் தசைகள் இறுக்கமாக இருத்தல்

சில நேரங்களில் வலி அதிகமாகவும் சில நேரங்களில் குறைவாகவும் இருப்பது.

எப்போது கவனமாக இருக்க வேண்டும்?

இரண்டு மூன்று வாரங்களுக்கு மேலாக மூட்டு வலி, வீக்கம் மற்றும் தசைஇறுக்கம், நடக்க முடியாத அளவுக்கு வலி இருந்தால்.., இது சாதாரண மூட்டு வலி இல்லை. உடனே அருகில் உள்ள மருத்துவர் அல்லது இயன்முறை மருத்துவரை அணுக வேண்டும்.

அறுவைசிகிச்சைதேவையா?

இளம் வயதில் பெரும்பாலும் அறுவை சிகிச்சைதேவையில்லை.

இயன்முறை சிகிச்சைகள்

இயன்முறை மருத்துவம் வலியை குறைப்பதற்கும் அறுவைசிகிச்சைதள்ளி வைப்பதற்கும் மிக முக்கியம்.

ஆரம்பத்தில் வரும் மூட்டு வீக்கம், அதிக வலி இருக்கும்போது ஐஸ் பேக் 5 முதல் 10 நிமிடங்கள் வைக்கலாம்.

TENS/IFT/Ultrasound therapy - மருந்து இல்லாம வலியை குறைக்க பயன்படுத்தப்படுகிறது.

மூட்டு அசைவு பயிற்சி- படுத்துக்கொண்டு முட்டியை மடக்கி நீட்டவும் இது மாதிரி பத்திலிருந்து பதினைந்து முறை பண்ணலாம்.

தசைபலப்படுத்தும் பயிற்சி - நாற்காலியில் அமர்ந்து முட்டியை நீட்டி பத்து நிமிடங்கள் அதே நிலையில் வைத்து பிடிப்பது,வலி இருந்தாலும் செய்யக் கூடிய (isometricexercise) - சிறிய துணி (டவல்) சுற்றி முட்டிக்கு அடியில் வைத்து 10 நிமிடங்கள் அழுத்தி பிடிக்கலாம்.சரியான காலணிகளை தேர்வு செய்தல், ஹை ஹீல்ஸ் பயன்படுத்தக் கூடாது.

உடல் நிலைப்பாட்டை (posture) கவனமாக பராமரிப்பது.

நடை பயிற்சி மேற்கொள்வது தேவைப்பட்டால் முழங்கால் ஆதரவு பட்டை( Knee brace) பயன்படுத்தலாம்.

முடக்கு வாதத்தை எவ்வாறு தடுப்பது?

★முழுமையாக தடுக்க முடியாவிட்டாலும் அதிகமாவதை தாமதப்படுத்த கண்டிப்பாக முடியும்.

★தினமும் 30 நிமிடம் நடைப்பயிற்சி

★உடல் எடையை கட்டுக்கோப்பில் வைத்தல்

★தொடையை சுற்றியுள்ள தசைகளை வலுப்படுத்துதல்

★தவறான (posture) தவிர்க்க வேண்டும்

★Squatting, kneeling அதிகமாக செய்ய வேண்டாம்.

★சரியான காலணிகளை பயன்படுத்துங்கள்.

முக்கிய குறிப்பு

‘‘முடக்கு வாதம் வயதின் காரணம் அல்ல ய

அன்றாட வாழ்க்கையின் பழக்க வழக்கங்களின் விளைவு’’.

இளம் வயதிலேயே மூட்டு வலி வந்தால் அதை அலட்சியம் செய்யாமல் சரியான நேரத்தில் அருகில் இருக்கும் மருத்துவரையோ அல்லது இயன்முறை மருத்துவரையோ அணுகவும்.


# நியூஸி.க்கு எதிராக 301 ரன்கள் இலக்கை போராடி வென்ற இந்தியா - முதல் ஒருநாள் ஹைலைட்ஸ்

வதோதரா: நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 301 ரன்கள் இலக்கை இந்திய அணி போராடி வெற்றி பெற்றது.

குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள கோடாம்பி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஷுப்மன் கில் பீல்டிங்கை தேர்வு செய்தார்.

பேட்டிங்கை தொடங்கிய நியூஸிலாந்து அணிக்கு டெவன் கான்வே, ஹென்றி நிக்கோல்ஸ் ஜோடி நிலைத்து நின்று விளையாடி சிறப்பான தொடக்கம் கொடுத்தது.





ஹென்றி நிக்கோல்ஸ் 60 பந்துகளில், 6 பவுண்டரிகளுடன் தனது 16-வது அரை சதத்தை கடந்தார். மறுபுறம் டெவன் கான்வே 60 பந்துகளில், ஒரு சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் தனது 6-வது அரை சதத்தை அடித்தார். முதல் விக்கெட்டுக்கு 21.4 ஓவர்களில் 117 ரன்கள் குவித்த இந்த ஜோடியை ஹர்ஷித் ராணா பிரித்தார்.

சிறப்பாக விளையாடி வந்த ஹென்றி நிக்கோல்ஸ் 69 பந்துகளில், 62 ரன்கள் எடுத்த நிலையில் ஹர்ஷித் ராணா வீசிய வைடு யார்க்கர் பந்தை அடித்த போது மட்டை விளிம்பில் பட்டு விக்கெட் கீப்பர் கே.எல்.ராகுலிடம் கேட்ச் ஆனது. ஹர்ஷித் ராணா தனது அடுத்த ஓவரில் டெவன் கான்வேவை போல்டாக்கினார்.

டெவன் கான்வே 67 பந்துகளில் 56 ரன்கள் சேர்த்தார். இதையடுத்து களமிறங்கிய வில் யங் 12 ரன்களில் மொகமது சிராஜ் பந்திலும், கிளென் பிலிப்ஸ் 12 ரன்களில் குல்தீப் யாதவ் பந்திலும் நடையை கட்டினர்.

நடுவரிசையில் அடுத்தடுத்து விக்கெட்கள் சரிந்த போதிலும் டேரில் மிட்செல் அதிரடியாக விளையாடினார்.

அவருக்கு உறுதுணையாக விளையாடிய மிட்செல் ஹே 18, கேப்டன் மைக்கேல் பிரேஸ்வெல் 16, ஜாக் ஃபோக்ஸ் 1 ரன்னில் வெளியேறினர். தனது 12-வது அரை சதத்தை அடித்த டேரில் மிட்செல் 71 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 84 ரன்கள் எடுத்த நிலையில் பிரசித் கிருஷ்ணா பந்தில் எல்பிடபிள்யூ ஆனார்.

இறுதிக்கட்ட ஓவர்களில் கிறிஸ்டியன் கிளார்க் 17 பந்துகளில், 3 பவுண்டரிகளுடன 24 ரன்களும், கைல் ஜேமிசன் 8 ரன்களும் சேர்க்க 50 ஓவர்கள் முடிவில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 300 ரன்கள் குவித்தது.

இந்திய அணி தரப்பில் மொகமது சிராஜ், ஹர்ஷித் ராணா, பிரசித் கிருஷ்ணா ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். குல்தீப் யாதவ் ஒரு விக்கெட் கைப்பற்றினார்.

இதையடுத்து 301 ரன்கள் இலக்குடன் இந்திய அணி பேட் செய்தது. தொடக்க வீரரான ரோஹித் சர்மா 29 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 26 ரன்கள் எடுத்த நிலையில் கைல் ஜேமிசன் பந்தில் மிட் ஆஃப் திசையில் நின்ற மைக்கேல் பிரேஸ்வெலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

முதல் விக்கெட்டுக்கு ரோஹித் சர்மா, ஷுப்மன் கில் ஜோடி 8.4 ஓவர்களில் 39 ரன்கள் சேர்த்தது.

இதையடுத்து களமிறங்கிய விராட் கோலி விரைவாக ரன்கள் சேர்த்தார்.

இதனால் இந்திய அணி 16.1 ஓவர்களில் 100 ரன்களை எட்டியது. தனது 16-வது அரை சதத்தை கடந்த கேப்டன் ஷுப்மன் கில் 71 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 56 ரன்கள் எடுத்த நிலையில் ஆதித்யா அசோக் பந்தில் கவர் திசையில் நின்ற கிளென் பிலிப்ஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார். 2-வது விக்கெட்டுக்கு ஷுப்மன் கில், விராட் கோலி ஜோடி 118 ரன்கள் சேர்த்தது.

இதையடுத்து களமிறங்கிய ஸ்ரேயஸ் ஐயர், விராட் கோலியுடன் இணைந்து விரைவாக ரன்கள் சேர்த்து நியூஸிலாந்து அணிக்கு அழுத்தம் கொடுத்தார். அபாரமாக விளையாடிய விராட் கோலி சதத்தை நெருங்கிய நிலையில் ஆட்டமிழந்தார்.

91 பந்துகளில், ஒரு சிக்ஸர், 8 பவுண்டரிகளுடன் 93 ரன்கள் விளாசிய விராட் கோலி, கைல் ஜேமிசன் வீசிய பந்தை கிரீஸை விட்டு வெளியே வந்து மிட் ஆஃப் திசையில் விளாசிய போது மைக்கேல் பிரேஸ்வெலிடம் கேட்ச் ஆனது. 3-வது விக்கெட்டுக்கு விராட் கோலி, ஸ்ரேயஸ் ஐயர் ஜோடி 77 ரன்கள் சேர்த்தது.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய ரவீந்திர ஜடேஜா 4 ரன்களில் கைல் ஜேமிசன் பந்தில் நடையை கட்டினார்.

கடைசி 10 ஓவர்களில் இந்திய அணியின் வெற்றிக்கு 62 ரன்கள் தேவையாக இருந்த நிலையில் கே.எல்.ராகுல் களமிறங்கினார்.

சீராக ரன்கள் சேர்த்து வந்த ஸ்ரேயஸ் ஐயர் 47 பந்துகளில், ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 49 ரன்கள் எடுத்த நிலையில் கைல் ஜேமிசன் வீசிய ஆஃப் கட்டரில் ஸ்டெம்பை பறிகொடுத்தார். 8 ரன்கள் இடைவெளியில் கைல் ஜேமிசன் வீழ்த்திய இந்த 3 விக்கெட்களால் இந்திய அணியின் பக்கம் நெருக்கடி திரும்பியது.

6-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய ஹர்ஷித் ராணா மட்டையை சுழற்றினார். கிறிஸ்டியன் கிளார்க் வீசிய 45-வது ஓவரின் கடைசி பந்தை ஹர்ஷித் ராணா சிக்ஸருக்கு விளாசினார்.

கடைசி 5 ஓவர்களில் இந்திய அணியின் வெற்றிக்கு 34 ரன்கள் தேவையாக இருந்தன. மைக்கேல் பிரேஸ்வெல் வீசிய அடுத்த ஓவரில் 8 ரன்கள் சேர்க்கப்பட்டன.

கிறிஸ்டியன் கிளார்க் வீசிய 47-வது ஓவரின் முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹர்ஷித் ராணா அடுத்த பந்தில் விக்கெட் கீப்பரிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார்.

23 பந்துகளை சந்தித்த ஹர்ஷித் ராணா ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 29 ரன்கள் சேர்த்தார். அவர், ஆட்டமிழந்த போது அணியின் வெற்றிக்கு 23 பந்துகளில், 22 ரன்கள் தேவையாக இருந்தன. இதையடுத்து வாஷிங்டன் சுந்தர் களமிறங்கினார்.

இந்த ஓவரில் எஞ்சிய 4 பந்துகளிலும் தலா ஒரு ரன் சேர்க்கப்பட்டது. ஜாக் ஃபோல்க்ஸ் வீசிய 48-வது ஓவரில் 6 ரன்கள் எடுக்கப்பட்டன. கடைசி 2 ஓவர்களில் 12 ரன்கள் தேவையாக இருந்தன.

கிறிஸ்டியன் கிளார்க் வீசிய 49-வது ஓவரின் முதல் 3 பந்துகளில் 3 ரன்கள் சேர்க்கப்பட்ட நிலையில் 4-வது பந்தை கே.எல்.ராகுல் ஸ்கூப் ஷாட் மூலம் பைன் லெக்திசையில் பவுண்டரி விளாசினார்.

தொடர்ந்து தாழ்வாக வீசப்பட்ட புல்டாஸை பந்தை கவர் திசையில் பவுண்டரியாக மாற்றி அசத்தினார் கே.எல்.ராகுல். கடைசி பந்தை கே.எல்.ராகுல் சிக்ஸருக்கு பறக்கவிட இந்திய அணி 49 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 306 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

கே.எல்.ராகுல் 21 பந்துகளில், ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 29 ரன்களும், வாஷிங்டன் சுந்தர் 7 ரன்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. 2-வது போட்டி வரும் 14-ம் தேதி ராஜ்கோட்டில் நடைபெறுகிறது.

# ஐயன்மேன் டிரையத்லான் போட்டியில் இந்திய வீரர்கள் அபார வெற்றி

சென்னை: ஐயன்மேன் 5150 டிரையத்லான் போட்டி சென்னையில் நேற்று நடைபெற்றது. தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் சினேகா, எஸ்டிஏடி உறுப்பினர் செயலாளர் மேகநாத ரெட்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




இந்த போட்டியில் 6 நாடுகளைச் சேர்ந்த சர்வதேவீரர்கள் உட்பட மொத்தம் 650 வீரர்கள் பங்கேற்றனர். எனினும் அனைத்து பிரிவுகளிலும் இந்திய வீரர், வீராங்கனைகளே ஆதிக்கம் செலுத்தினர். கடலில் நிலவிய சவாலான சூழ்நிலை காரணமாக நீச்சல் போட்டி ரத்து செய்யப்பட்டது. அதற்குப் பதிலாக, 5 கிலோ மீட்டர் ஓட்டம், 40 கிலோ மீட்டர் சைக்கிள் ஓட்டுதல் மற்றும் 10 கிலோ மீட்டர் ஓட்டம் என மாற்றியமைக்கப்பட்ட முறையில் போட்டி நடத்தப்பட்டது.டிரையத்லான் ஆடவருக்கான பொதுப் பிரிவில் ஆதர்ஷ் 2:05:14 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார். ராஜ்குமார் பவார் (2:08:21) 2-வது இடமும், குந்த்ரக்பம் இங்கம்பா மீடேய் (2:11:08) 3-வது இடமும் பிடித்தனர். மகளிர் பிரிவில் ஆர்த்தி நைனார் 2:55:23 என்ற விநாடிகளில் இலக்கை அடைந்து முதலிடத்தைப் பிடித்தார். கார்த்திகா ராஜாராம் (2:55:57) 2-வது இடமும், தீபா ராமகிருஷ்ணன் (2:58:28) 3-வது இடமும் பிடித்தனர்.

ரிலே பிரிவில் எஸ்ஒஎல் பிட்னஸ் குழுவினர் 2:21:36 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தனர். பாஸ் ஆஃப் டிரி குழுவினர் 2-வது இடத்தையும், 5121 ஸ்டிரைவர்ஸ் 3-வது இடத்தையும் பிடித்தனர். டிரையத்லானுடன் இணைந்து நடைபெற்ற 'டுயோஸ்கா டுயத்லான்' போட்டியில், ஆடவருக்கான ஸ்டாண்டர்ட் பிரிவில் சப்பன் பஞ்சால் (2:06:05) முதலிடமும், மகளிர் பிரிவில் மோகனதேவி (3:19:26) முதலிடமும் பிடித்தனர். ஆடவருக்கான ஸ்பிரிண்ட் பிரிவில் லோகிதாஸ் ராஜசேகரன் முதலிடமும், மகளிர் பிரிவில் அனீ வர்மா முதலிடமும் பிடித்தனர்.

# விரைவாக 28,000 ரன்கள் - விராட் கோலி சாதனை

நியூஸிலாந்து அணிக்கு எதிராக நேற்று வதோதராவில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலி 25 ரன்களை எடுத்திருந்த போது சர்வதேகிரிக்கெட்டில் 28 ஆயிரம் ரன்களை எட்டினார். இதன் மூலம் 28 ஆயிரம் ரன்களை விரைவாக எட்டிய வீரர் என்ற சாதனையை விராட் கோலி படைத்தார். இந்த மைல் கல் சாதனையை அவர், தனது 624-வது இன்னிங்ஸில் கடந்துள்ளார்.

இந்த வகையில் இதற்கு முன்னர் சச்சின் டெண்டுல்கர் 644 இன்னிங்ஸிலும், இலங்கையின் குமார் சங்ககரா 666 இன்னிங்ஸிலும் 28 ஆயிரம் ரன்களை எட்டியதே சாதனையாக இருந்தது. இதனை தற்போது விராட் கோலி முறியடித்துள்ளார்.

ரன் வேட்டையில் 2-வது வீரர்:

நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலி 42 ரன்களை எடுத்திருந்த போது சர்வதேகிரிக்கெட்டில் அதிக ரன்கள் குவித்த வீரர்களின் பட்டியலில் 2-வது இடத்தில் இருந்த இலங்கையின் குமார் சங்ககராவை (28,016 ரன்கள்) பின்னுக்குத்தள்ளினார். இந்த வகையில் சச்சின் டெண்டுல்கர் (34,357 ரன்கள்) முதலிடத்தில் உள்ளார். விராட் கோலி (28,068) 2-வது இடம் வகிக்கிறார்.

நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 301 ரன்கள் இலக்கை இந்திய அணி போராடி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# கேலோ இந்தியா அமைப்பு சார்பில் தென் மாநில அளவிலான மகளிர் சைக்கிள் போட்டி

திருப்போரூர்: கேலோ இந்தியா அமைப்பு சார்பில் தென் மாநில அளவிலான மகளிர் சைக்கிள் போட்டிகள் திருப்போரூரில் கடந்த 2 நாட்களாக நடைபெற்றன.

இதில், 5 மாநிலங்களைச் சேர்ந்த 330 பெண்கள் பங்கேற்றனர். போட்டிகளில் வென்ற பெண்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப் பிரதேமாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் பங்கேற்ற இப்போட்டிகளை கேலோ இந்தியா அமைப்பின் தென் மண்டலப் பிரிவு நடத்தியது. 14 வயது முதல் 16 வயதுக்கு உட்பட்டோர்,

16 முதல் 18 வயதுக்கு உட்பட்டோர் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டோர் என 3 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 5 மாநிலங்களைச் சேர்ந்த 330 பெண்கள் கலந்து கொண்டனர்.

ரூ.1.38 லட்சம் பரிசு: இந்தப் போட்டிகளை தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகப் பதிவாளர் லில்லி புஷ்பம் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையப் பொது மேலாளர் எல். சுஜிதா, கோட்டாட்சியர் மணி கண்டன் ஆகியோர் பதக்கங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினர்.

மொத்தம் ரூ.1.38 லட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு சைக்கிள் சங்கத் தலைவர் எம். சுதாகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பொங்கல் வெளியீட்டுக்கு குவியும் படங்கள்




'ஜனநாயகன்' வெளியீடு இல்லை என்பது உறுதியானதால், பொங்கல் வெளியீட்டுக்கு பல்வேறு படங்கள் தங்களது வெளியீட்டை உறுதிப்படுத்தி வருகின்றன.ஜனவரி 9-ம் தேதி வெளியாக இருந்த படம் 'ஜனநாயகன்'. தணிக்கையில் ஏற்பட்ட பிரச்சினையினால் தற்போது இந்த விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கிறது. எப்போது வெளியாகும் என்பது தெரியாமல் இருக்கிறது.

ஆனால், பொங்கல் வெளியீடு சாத்தியமில்லை என்பது மட்டும் உறுதியாகிவிட்டது.இதனால், பல்வேறு படங்கள் ஜனவரி 14 மற்றும் 15-ம் தேதிகள் வெளியாக இருக்கின்றன. கார்த்தி நடித்துள்ள 'வா வாத்தியார்', ஜீவா நடித்துள்ள 'தலைவன் தம்பி வழியில்', சந்தானம் நடித்துள்ள 'சர்வர் சுந்தரம்', மோகன் ஜி. இயக்கியுள்ள 'திரௌபதி 2'. விஜய் நடிப்பில் மறுவெளியீடாக 'தெறி' உள்ளிட்ட படங்கள் வெளியாக உள்ளன. இவற்றை விளம்பரப்படுத்தும் பணிகள் மும்முரமாக தொடங்கவுள்ளன.ஜனவரி 14-ம் தேதி 'வா வாத்தியார்' வெளியாகும் என விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. இதர படங்கள் யாவுமே ஜனவரி 15-ம் தேதி வெளியாகவுள்ளன.ஜனவரி 10-ம் தேதி வெளியாகியுள்ள 'பராசக்தி' படமே பெரும்பாலான திரையரங்குகளில் திரையிடப்பட்டு வருகின்றன. பொங்கல் விடுமுறை காலங்களில் பொதுமக்கள் குடும்பத்துடன் திரையரங்கிற்கு வருவார்கள் என்பதால் தான் இந்தப் போட்டி என்கிறார்கள்.

# 'வா வாத்தியார்' ஜன.14-ம் தேதி வெளியீடு



'வா வாத்தியார்' பிரச்சினைக்கு முடிவு எட்டப்பட்டு ஜனவரி 14-ம் தேதி வெளியிடும் வகையில் வெளியீட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கார்த்தி நடிப்பில் உருவாகியுள்ள படம் 'வா வாத்தியார்'. சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினால் இப்படம் வெளியாகாமல் இருந்தது. ரூ.21 கோடி செலுத்திவிட்டு படத்தினை வெளியிடலாம் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதனால், இப்படம் எப்போது வெளியாகும் என்பது தெரியாமல் இருந்தது.தற்போது தயாரிப்பாளர் ஞானவேல்ராஜா இப்பணத்தினை தயார் செய்துவிட்டார் என்கிறார்கள். இதனாலேயே தைரியமாக ஜனவரி 14-ம் தேதி வெளியீடு என்று விளம்பரப்படுத்தி வருகிறார்கள்.

நாளை (ஜனவரி 12) உயர் நீதிமன்றத்தில் பணத்தினை செலுத்தி தடையினை நீக்க முடிவு செய்திருக்கிறார்கள். இதனால் ஜனவரி 14-ம் தேதி வெளியீட்டில் எந்தவொரு மாற்றமும் இல்லை என படக்குழு சார்பில் விநியோகஸ்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நலன் குமாரசாமி இயக்கத்தில் கார்த்தி, ராஜ்கிரண், சத்யராஜ், கீர்த்தி ஷெட்டி, ஆனந்த்ராஜ் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'வா வாத்தியார்'. ஸ்டுடியோ க்ரீன் தயாரித்துள்ள இப்படத்தின் ஒளிப்பதிவாளராக ஜார்ஜ் வில்லியம்ஸ், இசையமைப்பாளராக சந்தோஷ் நாராயணன் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர்.'

# பராசக்தி'யில் ரவி மோகன் தான் நம்பர் ஒன்: கெனிஷா

சென்னை: '''பராசக்தி' படத்தில் ரவி மோகன் தான் நம்பர் ஒன்'' என்று அவரது தோழி கெனிஷா கருத்து தெரிவித்துள்ளார்.சுதா கொங்காரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகியுள்ள படம் 'பராசக்தி'. இப்படத்தில் ரவி மோகன் முதன்முறையாக வில்லனாக நடித்துள்ளார். இன்று காலை படக்குழுவினர் வெவ்வேறு திரையரங்குகளில் 'பராசக்தி' படத்தை கண்டுகளித்தனர்.சென்னை - காசி திரையரங்கில் ரசிகர்களுடன் படத்தை கண்டு களித்தார் ரவி மோகன். அவருடன் அவரது தோழியான கெனிஷாவும் வந்திருந்தார். படம் முடிந்தவுடன் செய்தியாளர்களிடம் கெனிஷா பேசும்போது, ''அவர் வில்லனாக நடித்தால் என்ன, ஹீரோவாக நடித்தால் என்ன... அவரால் படம் ஓடும். இந்த கதாபாத்திரத்துக்காக 6 மாதங்கள் கடுமையாக உழைத்தார். என் கண்ணுக்கு அவரை தவிர வேறு யாரும் தெரியவில்லை.இந்தப் படத்தை பார்க்கும்போது அவருக்காகவே பண்ணியிருக்கிறார்கள் என்று தோன்றியது. 'பராசக்தி' படத்தில் அவர்தான் நம்பர் ஒன். முதல் பாதியில் அவரை பார்ப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். 2-ம் பாதியில் அவரைத் தாண்டி எதுவுமே இல்லை என தெரிந்துவிடும்'' என்று கெனிஷா தெரிவித்துள்ளார்.

TO ADVERTISE
PLEASE CONTACT
மெட்ராஸ் மணி
MADRAS MANI
NATIONAL TAMIL DAILY NEWS PAPER
9000657700
9912220350
e.mail : info.southindiatimes@gmail.com

Printed Published and Owned by Buchi Babu Vuppala, Printed At Thanmayee Printers, No:7,3 RD street, Krishna Nagar, Moouarasampet, Madipakkam Chennai-91, Tamil Nadu. Published from 8/5, Mannarswamy koil street, PULIANTHOPE, Chenni-600012, Tamil Nadu Editor: **H.MD. HARIEF,** mail: info.southindiatimes@gmail.com, phone.9000657700, **RNI Reg No. TNTAM/2018/75087.**